# சுதந்திரப் பறவைகள்



தை - மாசி - பங்குனி ; 1986

விலை:- ரூபா 4-00

# ஓர் நிமிடம் இங்கே.....

இன்று பெண் விடுதலை என்ற சொற்பிரயோகத்தைக் கேட்டவுடன் பெரும்பாலானவர்கள் முகத்தைச் சுளித்துக் கொள்கிறார்கள் என்றால் அது பெரும்பாலும் பெண்களாகத்தான் இருக்கிறார்கள். அதற்காக பெரும்பாலான ஆண்கள் ஆண், பெண் சமத்துவத்தை விரும்புகின்றார்கள் என்பது கருத்தல்ல, பெண் விடுதலையைப்பற்றிப் பேசுபவர்களை அவர்கள் ஒரு பொருட்டாக நினைப்பதில்லை என்பதேயாம். அதனால் அச் சொற்பிரயோகத்தைக் கேட்டவுடன் அவர்கள் முகத்தில் எவ்விதச் சலனமும் ஏற்படுவதில்லை.

இப்படிப் பார்க்கும்போது பெண்கள் பெண்களாலும், ஆண்களாலும் எவ்வாறு கணிக்கப்படுகிறார்கள்; கருதப்படுகிறார்கள் என்பது விளங்குகின்றது. ஓர் உயிர் ஜீவியாகக் கூட பெண்ணை நினைக்காத சமூகம் இன்று ஓரளவு பெண்ணை மனிதப் பிறப்பாக எண்ண ஆரம்பித்திருக்கிறது. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள். பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை மையமாகக் கொண்டு வெளியிடப்படும் சஞ்சிகைகள், கட்டுரைகள் சிலரின் கருத்துக்களையாவது மாற்றிக்கொண்டு வருகின்றதென்று சொல்ல வேண்டும்.

பெண்ணை மனிதப் பிறவியாக நினைக்கவே இவ்வளவு காலமென்றால் பெண்ணைபெண்ணாகக் கருத பலகாலம் எடுக்குமே என்று எவரும் சோர்வடைய வேண்டிய அவசியமில்லை. இடைவெளி விட்டு அம்மியை அடிக்கும்போது மெதுவாக நகரும். விரைவாக அடிக்கும்போது விரைவாக நகரும், அதே போல் எல்லா பெண்கள் அமைப்புக்களும் தொடர்ந்து கருத்துக்களால் சிந்தனையை தட்டிவிடும்போது பெண்கள், பெண்களாக மதிக்கப்படும் காலம் விரைவில் வரும்

அந்த விதத்தில் எம்மால் செய்ய முடிந்ததை செய்ய நினைக்கிறோம். பெண்களானாலும் ஆண்களானாலும் எல்லோரும் சிந்திக்கத் தெரிந்தவர்கள். முற்போக்கான சிந்தனை எல்லோரிடமும் உண்டு. அதனை வெளியிடத்தான் எல்லோருக்கும் வாய்ப்பும் களமும் கிடைப்பதில்லை எமது சஞ்சிகையில் தமது சிந்தனையோட்டங்களை எழுத்து வடிவமாக்கித் தரும் எவரினதும் தேசிய, சமூக, விடுதலை சம்பந்தமான ஆக்கங்கள் அனைத்தும் பிரசுரிக்கப்படும். படித்த வர்க்கத்தினர் மட்டுமல்லாமல் ஓரளவு வாசிக்கத் தெரிந்த மக்களும் வாசித்து விளங்கி மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறும் விதத்தில் அமையும் ஆக்கங்களே பிரசுரிக்கப்பட வேண்டும் என்பதே எமது கருத்து.

சத்தியாவேசம் உழைப்பு வீரம் மனிதாபிமானம் நேர்மை

**தேசிய, சமூக, வர்க்க விடுதலை**

# முக்கோணக் கருத்துக்கள்

**சமீபத்தில் ஓர் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அக்கல்லூரி அதிபர் சமர்ப்பித்த அறிக்கை கூறுகிறது.....**

*ஆழ்ந்த அறிவும் ஆற்றலும் பெற்றுக் கடமையாற்றும் மகளிர் நம்மிடையே இல்லாமல் இல்லை. தத்தம் கடமைகளைச் சரியாகச் செய்து வரும் இவர்கள் சில சமயங்களில் ஆழ்ந்த கருத்துக்களையும் வெளியிடுகிறார்கள். ஆனால் அந்தக் கருத்துக்கள் அதேயளவில் நின்று விட்டால் போதாது. காண்பவர்கள் கேட்பவர்களின் சிந்தையைத் தூண்டி செயற்படவும் வைக்க வேண்டும்.*

*''பெஞ்சமின்ளோ'' என்னும் பிரபல உளவியலறிஞர் கருத்தின்படி ''பால்யம்'' என்பது பிள்ளைப் பராயத்துக்கும் மனித பராயத்துக்கும் இடைப்பட்ட மாற்றுக்காலமாகும். பிள்ளைப் பராயம் இறந்துபோக மனிதன், அல்லது மனுஷி பிறக்கிறது.*

*பால்யத்தின் முற்பகுதியிலேயே ஒரு பிள்ளை தனது நிரந்தரமான துறைகளை விருத்தி செய்ய ஆரம்பிக்கிறது. ஒரு பிள்ளையின் தனித்துவம் அல்லது ஆளுமை அதன் முடிவான பாங்கினைப் பெற்றுத் தன் பிற்கால வாழ்க்கையில் மனுஷியோ, மனிதனோ எந்தமாதிரியாக உருவாகலாம் என்பதைக் காட்டித் தருவது இக்காலப் பகுதியே.*

*எனவே இந்த மாற்றக் காலத்தில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் பிள்ளைகளிடையே சரியான பெறுமதி ளவை என்பதைத் திணித்துக் கூறுவதோடு தமது சொந்தப் பாவனையாலும், உதாரணத்தாலும் நல்லவற்றைக் காட்டிக் கொடுக்கவும் வேண்டும். அத்தோடு பிள்ளைகளின் நடத்தைகளையும் ஒழுங்கையும் நன்றாக அவதானித்துப் படித்து சரியான திசையில் அவர்கள் செல்வதற்கு அவர்களுக்குத் தந்திரமாகவும் வழிகாட்ட வேண்டும்.*

*பிள்ளைகள் தமது திறன்களைப் பல வழிகளில் புலப்படுத்துவார்கள், தமது சுய ஆற்றல்களை வெளியிடுவதற்கு வீட்டிலும், பாடசாலையிலும் எண்ணற்ற திறன் வழிகளை வகுப்பதால் பிள்ளைகள் தமது ஆற்றல்களை வெளியிட வாய்ப்பு ஏற்படுகிறது. பாடசாலைகளில் பல தரப்பட்ட பாடங்களை அறிமுகம் செய்வதும் பிள்ளைகள் தமக்கு அதி பொருத்தமான துறையைத் தேர்ந்தெடுப்பதற்கே.*

*துறை தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பிள்ளைகளை அத்துறையில் நம்புகிறோம்; பொறுப்பு வழங்கியுள்ளோம் என அவர்களை உணரவைக்க வேண்டும். அவர்கள் மூளையுள்ளவர்களாதலால் நியாய பூர்வமாகச் சிந்திக்க வல்ல மனிதராக நாம் அவர்களை நடத்திக்கொள்ள வேண்டும். தமது வீடுகளிலும் வெளியேயும் பயமின்றி அவர்கள் ஊசாட வல்லவர்கள், என அவர்களை உணரவைக்க வேண்டும். ஆக்க பூர்வமான வேலைகளில் பங்குபற்றவும் பயனுள்ள பொழுது போக்குகளில் ஈடுபடவும் அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.*

*பெற்றோர் ஒத்துழைத்து வழிகாட்டும் வீட்டுச் சூழல் அவர்களுக்குக் கட்டாயம் தேவை. முதிர்ந்து வரும் இந்த வளர்ச்சி நிலையில் நாம் எதிர்த்துப் போராட வேண்டிய நிலைமைகளை வென்று தமது உணர்ச்சிகளையும் நடத்தைகளையும் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்புடன் வழிகாட்டும் பெற்றோரும் வீடும் தேவைப்படுகின்றது.*

பால்யம் பிள்ளைப் பராயத்தின் கடைசிக் கட்டமாகும். பதினன்கிற்கும் இருபதிற்கும் இடைப்பட்ட இந்த வயதுக் கட்டத்திற்கு ஆயத்தம் செய்வது. சிறுபிள்ளைகள் சந்தோஷமாகவும் காருண்யமாகவும் வளர்ப்பதேயாகும். சிறு பிள்ளையிலிருந்தே எல்லா பிள்ளைகளும் உடலிலும் உள்ளத்திலும் உணர்விலும் சுகமுடையவர்களாக வளர்க்கப்பட்டால் பல நாடுகளில் இன்று ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்க மாட்டா. சிறு பிராயத்திலும் இளம் வயதிலும் போதிய மனநிலைச் சௌக்யம் இல்லாத காரணத்தாலேயே பல நாடுகளில் இந்த சீரிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. மனைகளும் கல்விக் கூடங்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

## அதிபரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டிருந்த ஒருவரின் மனத்திலெழுந்த கேள்விகள்

பாடசாலை அதிபரின் கருத்துக்கள் இவ்வாறிருக்க இவற்றை நடைமுறையில் எப்படிக் காண்கிறோம், இவை கடைப்பிடிக்கத் தக்கவைகளா?

எமது சிந்தனையைத் தூண்டி விடுவோம். எத்தனை பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குத் தேவையான சூழ்நிலைகளை வீட்டில் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். பிள்ளைகள் திருப்தியாக இருக்கிறார்களா? பிள்ளைகளின் விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் பெற்றோர்கள் ஏற்ற வகையில் ஒத்துழைக்கிறார்களா? பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எத்தனை? அவை என்ன? என்ன? பிள்ளை பால்யத்தில் தேர்ந்தெடுக்கும் திறன் வழிகள் அவர்களுக்குப் பொருத்தமானவையா? சூழ்நிலைகளாலும் உணர்ச்சிவசத்தாலும் அன்றி தமக்கு இயல்பாகவுள்ள திறன் நிமித்தமாக எந்தத் துறையையும் தமது சொந்தத் துறையாகத் தேர்ந்தெடுக்கிறார்களா?

இல்லை, இல்லை என்பதே இங்கு பதிலாக பலருக்குத் தோன்றும். உணர்ச்சி வசப்பட்டு தாம் செய்வது எது என்று தெரியாது, நல்லது கெட்டதை ஆராயாது செயலில் இறங்கி வருகிறது. இளம் சமுதாயம். பால்யத்தை பராமரிப்பதற்கு பெற்றோராலும் முடிவதில்லை. ஆனாலும் தம் மாலியன்றதை செய்து வருகின்றனர். தமிழ்ச் சமுதாயத்தை பொறுத்தவரை பால்ய வயதுப் பெண்கள் என்ன செய்கிறார்கள்? தமக்கு ஏற்ற துறையைத் தேர்ந்து அதிலே திளைத்து வளர முயல்கிறார்களா?

நாட்டு நிலைமைகள் பால்ய வயதினரைப் படுத்தாத பாடு படுத்துகிறதா? இன்றேல் எந்த எடுப்பில் உணர்ச்சி வசப்பட்டும் சூழல்வசப்பட்டும் மாட்டிக் கொள்கின்றனரா? பால்யப் பெண் வளர்க்கும் தாயே உன் பதில் என்ன? தகப்பனே உமது கருத்து என்ன? அண்ணனே தங்கைக்குப் பதில் சொல்? அக்காளே நீ நினைப்பது யாது? தம்பி, தங்கையருக்கும் இதில் பங்குண்டு. எல்லோரும் சேர்ந்ததே வீடு. வீடுகள் சேர்ந்ததே நாடு.

## எங்கள் எண்ணத்தில் இப்படி...

ஒவ்வொருவரின் மனப் புத்தகங்களில் நினைவுகள், செயல்கள் அனைத்தும் அழுத்தமாக பதிந்து விடும் காலம் அவரவர்களின் பால்யப் பருவம்தான். அந்தப் பருவ காலங்களில் பிள்ளைகள் எல்லோரும் ஆசிரியர்களாலும் பெற்றோர்களாலும் வழிநடத்தப்படுகிறார்கள். அவர்களின் நடத்தைகள் தான் அப்பிள்ளைகளின் எதிர்காலத்தை நிர்ணயிப்பவையாகும். பெற்றோரோ, ஆசிரியரோ விடும் தவறுகள் அவர்களால் வழிநடத்தப்படும் பிள்ளைகளின் நல்வாழ்வையே பாழடிக்கவும் காரணமாக அமையும் மகத்தான பொறுப்பை ஏற்றிருக்கும் பெற்றோரும் ஆசிரியரும் தமது கடமையை மறந்து விடக் கூடாது.

சொந்த மண்ணை மீட்டெடுத்து சோஷலிசத் தமிழீழம் காணப் போராடி வருகிறோம். இன்று எமது பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டியவை எவ்வளவோ உள்ளது. எமது மண்ணை நேசக்க வேண்டுமென்பதைப் பிள்ளைகளுக்கு உணர்த்தி அவர்கள் மனதில் அதனைப் பதிய வைப்பதில் ஒவ்வொரு பெற்றோரும் ஆசிரியரும் ஈடுபட வேண்டும். எமது மண்ணை மீட்டெடுக்கத்தான் விடுதலைப் போராளிகள் போராடி வருகின்றார்களேயன்றி தமிழீழ, ஸ்ரீலங்கா, தினசரிச் செய்திப்பத்திரிகைகள் வானொலி தொலைகாட்சி போன்றவை கூறுவது போல அவர்கள் பயங்கரவாதிகள் இல்லை என்பதை புரிய வைக்க வேண்டும்.

எமது தாயகமாம் தமிழீழத்தை மீட்டெடுக்கப் போராட வேண்டியது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்பதை உணர்த்தும் விதத்தில் பாடங்களை படிப்பிக்க வேண்டும். சிங்கள அரசின் பாடத்திட்டத்திற் கேற்ப அதனால் வழங்கப்படும் புத்தகங்களைப் படிப்பிக்கவேண்டிய நிர்ப்பந்தம் எல்லோருக்குமே உண்டு. ஆனாலும் நாம் படிப்பிக்கும்போது இந்த உணர்வுகள் அவர் மனதில் ஏற்படுத்தும் விதத்தில் படிப்பிக்க வேண்டியது மிக மிக முக்கியமானது.

உழைப்பின் மகத்துவத்தை பிள்ளைகளின் மனதில் அழுத்தமாகப் பதிவிக்கும் விதத்தில் பாடங்கள் வேண்டியது ஆசிரியர்களின் கடமையென்றால் அதனை உணர்த்தும் விதத்தில தமது வளர்ப்பு முறையை மாற்றியமைக்க வேண்டியது பெற்றோரின் பொறுப்பாகும். கஷ்டங்கள் தெரியாமல குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்று பல பெற்றோர் எண்ணுகின்றனர். ஆனால் அப்படி வளர்ப்பது அப்பிள்ளைகளின் எதிர்கால வாழ்வைப் பாதிக்கும் என்பதை அவர்கள் உணர்வதில்லை. இன்பமும் துன்பமும் நிறைந்த நிஜ வாழ்வினைப் படம் பிடித்து காட்டும் விதத்தில் தான் நமது நடவடிக்கைகளை பெற்றோரும் ஆசிரியரும் மேற்கொள்ள வேண்டுமே தவிர மகிழ்ச்சி நிறைந்ததுதான வழ்க்கை என்ற ஓர் கற்பனை வாழ்வைப் படம பிடித்துக்காட்டி பிள்ளைகளை பலவீனமானவர்கள ஆக்கக் கூடாது இன்பம் சூழ்ந்த இனிய மாளிகை போன்றதே வாழ்க்கை என்ற நம்பிக்கையுடன் வளர்க்கப்பட்ட பிள்ளை துன்பங்களைக் கண்டவுடன் துவண்டு போகின்றது. துன்பங்களை எதிர்கொண்டு சமாளிக்க தைரியமில்லாததாகி விடுகிறது, துயரமும் வரும் என்ற நினைப்பு இருக்குமானால் அதனைத் தாங்கிக் கொள்ளும் மனப் பக்குவத்தை பிள்ளை பெற்றுக்கொள்ளும்.

பெண்களை அடக்கி ஆளவேண்டும், என்ற உணர்வை ஆண்பிள்ளைகளின் மனதிலும், பெண்கள் நியாயம் இருந்தால் கூட தன் கருத்தை பலர் முன்னிலையிற் சொல்லாமல் அடங்கி, ஒடுங்கி இருக்க வேண்டும் என்ற உணர்வை பெண்பிள்ளைகளின் மனதிலும், ஏற்படுத்தும் விதத்தில் பெரும்பாலான பெற்றோரும் ஆசிரியர்களும் முன்பு நடந்துகொண்டார்கள். அப்படி வளர்க்கப்பட்ட சமுதாயம் அந்த நினைப்பிலிருந்து தமது மனத்தை திருப்ப முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் எப்போதோ மேலும் முன்னெடுக்கப்பட்டிருக்கவேண்டிய எமது விடுதலைப் போராட்டம இன்னும் ஓர் தேக்கநிலையில் உள்ளது.

இப்போது பால்யப் பருவத்தில் உள்ள பிள்ளைகள் தன்னம்பிக்கையுள்ள, தாம் பிறந்த தம் உயிரிலும் மேலாக நேசிக்கின்ற, உழைத்து வாழவேண்டுமே தவிர பிறர் உழைப்பில் வாழக் கூடாது என்று எண்ணும் மனோபாவமுள்ள பிள்ளைகளாக வளர்த்து மலரப்போகும் சோஷலிசத் தமிழீழத்தை மேலும் முன்னேற்றக் கூடியவர்களான இளைஞர், யுவதிகளை உருவாக்கவேண்டிய கடமை தமது என்பதை மறந்துவிடாமல் பெற்றோரும் ஆசிரியரும் நடந்து கொள்வது நல்லது என்பதே எங்கள் அபிப்பிராயம்.

**"நேருவின் கடிதங்களில்" இருந்து**

பழங்காலத்தோடு நமக்குள்ள தொடர்புகளை நாம் பாதுகாத்து வைத்துக் கொள்ளவேண்டும்; ஆனால் பழைய வழக்கம் என்கின்ற தளை நமது முன்னேற்றத்தை தடுக்கும் போதெல்லாம் அதை முன் பின் பாராது அறுத்தெறிய வேண்டும்.

# சில வெளியேற்றங்கள் தொடர்ந்தால்...

'அண்ணு என்னை அடிக்காதேங்கோ, என்னை அடிக்காதேங்கோ' என்றுதான் ஜான்சி அலறினுளேயன்றி 'நான் இனி அப்படிச் செய்யமாட்டேன்' என்று சொல்லிக் கத்தவில்லை. அந்த அளவில் அவள் ஒரு துணிவுள்ள பெண்தான். தன் மகள் ஓர் வீரப்பெண்ணுகத் திகழவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் தன் குழந்தையுடன் போர்க்களம் சென்று எதிரியுடன் போர்புரிந்து களத்தில் வீரமரணம் அடைந்ததாக சித்தரிக்கப்படும் ஜான்சிராணி என்னும் இந்தியப் பெண்ணின் பெயரை தன் மகளுக்கு சூட்டி மகிழ்ந்த தாய் தன் மகள் படும் கொடுமைகளைக் கண்டு மௌனமாகக் கண்ணீர் வடித்தாளேயன்றி ஜான்சியை மிருகத்தனமாக அடித்துக் கொண்டிருக்கும் மகனைத் தடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

தன் கணவன் இறந்த நாள் முதல் தன் மகனின் உழைப்பில் வாழ்ந்துகொண்டிருக்கும் அந்தத் தாயினுல் என்ன செய்யமுடியும்? அவ்வளவு அடிகளையும் உதைகளையும் வாங்குவதற்கு ஜான்சி செய்த குற்றமென்ன? அவளுக்கு மட்டுமல்ல, தாய் நாட்டின் சுதந்திரத்தில் வேட்கை கொண்டுள்ள எந்த ஒரு குடிமகனுக்கோ, மகளுக்கோ அது குற்றமாகத் தெரியாது. விடுதலைப் போராட்டத்திற்காக ஒவ்வொரு போராளியும் உழைக்கும் நேரம் எல்லாம் வீண்விரயம் என்று கூறி தான் தமிழீழக் குடிமகன் அல்லது குடிமகள் அல்ல என்று கருதுபவர்களுக்குத்தான் அது குற்றமாகப்படும்.

ஜான்சி ஒரு விடுதலை ஸ்தாபனத்துப் பெண்களுடன் சேர்ந்து தன்னுலான பங்களிப்பைச் செய்து வந்தாள். அந்த விடயம் எப்படியோ அவளின் அண்ணுவுக்குத் தெரியவந்து விட்டது அதுதான் அவளுக்கு இவ்வளவு அடி உதைகள். பெரும்பாலான ஆண்கள் தம் மனைவியோ, மகளோ. சகோதரியோ தமக்குக் கீழ்ப் படிய வேண்டும் என்றே எதிர்பார்க்கிருர்கள். சில ஆண்கள் அதனைச் செய்கைகளில் காட்டுவர். சிலர் மனதிற்குள் அவ்வெண்ணத்தை வைத்துக்கொண்டு வெளியில் அப்படி இல்லை என்பது போல நடந்து கொள்வார்கள். ஜான்சியின் அண்ணு முதலாவது ரகத்தைச் சேர்ந்தவர். "என்னுடை சீவிக்கிற நீங்கள் எனக்குக் கட்டுப்பட்டு நடக்கிறதெண்டால் இந்த வீட்டிலை இருக்கலாம். இல்லையெண்டால் வீட்டைவிட்டுப் போயிடலாம். நீங்கள் இருக்கிறதும் போறதும் உங்கடை கையிலை தான் இருக்குது." என்ற மந்திரத்தைத்தான் தாய், தங்கை, மனைவி அனைவருக்குமே சொல்வார்.

இப்படியெல்லாம் வாய்ப்பூட்டுப் போட்ட மகனிடம் ஜான்சியின் தாயால் மகளுக்காகப் பரிந்து பேசமுடியவில்லை. மகள் செய்தது குற்றமேயில்லை என்பது அந்தத் தாய்க்குத் தெரியும். ஆனுல் அப்படிச் சொல்ல அவளுக்குத் துணிவே இல்லை. கணவன் இருக்கும் வரை கணவனுக்கு அடங்கி ஓர் எஜமானன் இட்ட கட்டளையை சிரமேற் கொண்டு சேவை புரியும் வேலையாளாக வாழ்ந்த அவள் அதே நிலையில் தான் இன்று மகனுடன் வாழ்கிருள். எஜமானன் வேறு. வேலையாள் அதே ஆள் தான்.

அடித்துக் களைத்த ஜான்சியின் அண்ணு அத்துடன் நிறுத்திவிட்டு வெளியே போனுர். அடிபட்டு வலிக்கும் ஜான்சியின் உடலை வருடிக் கொடுக்கப் போகவே தாய்க்குப் பயமாயிருந்தது. பயந்து பயந்து மகளருகில் போன அந்தத்தாய் வலி பட்ட இடங்களை வருடிக் கொண்டிருந்தாள். தாயின் அன்பான அணைப்பு அதுவரை கொடிய அடிவாங்கி வராத கண்ணீரை ஜான்சிக்கு வரவழைத்தது. தாயாரைக் கட்டிப்பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள் அவள்.

"அம்மா - - - அம்மா - - - நான் செய்தது குற்றமேயம்மா? ஒரு ஆம்பிளைக்கு மட்டுமில்லை, ஒரு பொம்பிளைக்கும் அவளின்ரை நாடு தாயைப் போலத்தானே. தாய்க்கு ஒரு அவமானம் ஏற்பட்டால் பிள்ளை பொறுக்காதது போலத்தானே தாய் நாட்டுக்கு இழிவு வந்தாலும் பொறுக்கமாட்டாள். எங்கடை தாய்நாட்டை மீட்டெடுக்க பொம்பிளையளான நாங்களும் போராடத்தானே வேணும். தமிழீழத்திலே பிறந்த எல்லாருக்கும் அந்தக் கடமை இருக்குதுதானே. அண்ணுவோ, அண்ணியோ நீங்களோ அந்தக் கடமையை உணராதது போலை நானும் உணராமல் சடமாக இருக்க வேணுமெண்டுதானே அண்ணு இப்படி வதைக்கிருர். நான்செய்தது பிழையே அம்மா. சொல்லுங்கோ அம்மா" என்று சொல்லி அழுதாள்,

அவளை அன்போடு அணைத்துக் கொண்ட தாய் "ஜான்சி! அழக்கூடாது. நீ ஒரு வீரப்பெண்ணுய் இருக்க வேணும் எண்டுதான் வீரப்பெண் ஜான்சி ராணியின்ரை பெயரை உனக்கு வைச்சனுன். அவள் மொழியாலையும், நாட்டாலையும் எங்களிலையிருந்து வேறுபட்டாலும் இனத்தாலை ஒன்றுபட்டவள். எங்கடை பெண் இனத்தைச் சேர்ந்தவள். நான்தான் சர்க்கஸ்காரனின் சவுக்குக்குப் பயந்த மிருகம் போல பயந்து பணிஞ்சு வாழ்ந்தன், வாழ்கிறன். உன்ரை அண்ணியும் அப்படித் தான். எங்கள் இரண்டு பேருக்கும் கடமை உணர்வு இருக்குது. ஆனுல் எதுவும் சொல்ல முடியாமல் விலங்கு போடப்பட்டிருக்கிறம். எங்களைப் போலத்தான் கன பொம்பிளையள் வாயிருந்தும் ஊமையாய் வாழுகினம். ஆருல் நீ அப்படி இருக்கக் கூடாது. நியாயம் எதுவோ அதுக்காக வாதாடு, போராடு, அப்பிடிப்பட்ட பொம்பிளைப் பிள்ளையளை உருவாக்கு. அதுக்காக அடி உதை வாங்கினுலும் பரவாயில்லை. உனக்கு அடி விழுகிறபோது என்ரை பெத்த வயிறு பற்றியெரிந்தது. ஆனுலும் உனக்கு முன்னுலை என்ரை கண்ணீரைக் காட்ட விரும்பேல்லை. என்னைக் கல்லாக்கிக் கொண்டன் - - -" இப்படிக் கூறிக்கொண்டு இடையில் நிறுத்திய தாய் தன் கண்ணில் துளிர்த்த நீர்த் துளிகளை தன் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

அம்மா! அடி விழும்போது உங்களைக் கல்லாக்கிக்கொண்ட நீங்கள் ஏன் இப்ப அழுகிறீங்கள்?" வியப்புடன் கேட்டாள் ஜான்சி "அப்போது உனக்காக அழவில்லை. நான் அழுது உன்னையும் பலவீனமாக்கினுல் நீயும் என்னைப்போல ஒரு வாழ்க்கையைத்தான் வாழ்வாய். அப்பிடி நீ வாழக்கூடாது. நீ சுதந்திரமுள்ள ஒரு பொம்பிளையாய் வாழவேணும். பொம்பிளையளின்ரை அடக்கு முறை வாழ்வுக்கு மட்டுமில்லை, எங்கடை தமிழினத்தின்ரை விடிவும் உங்களைப் போன்ற பொம்பிளையளின்ரை கையிலைதான் இருக்குது. இந்த நாட்டை மீட்கிற கடமை இந்த தமிழீழத்து ஆம்பிளைகளுக்கு மட்டுமில்லை பொம்பிளைகளுக்கும் இருக்குது. ஆர் என்ன சொன்னுலும் சொல்லட்டும். நான் ஒண்டு சொல்லுறன் எங்கடை இனத்தின்ரை விடுதலையோ. சமுகத்தின்ரை விடுதலையோ தனிய ஆம்பிளையளாலையும் பெறமுடியாது.

தனிய பொம்பிளையளாலையும் அடைய முடியாது. இரண்டுபேரும் சேர்ந்து பாடு பட்டால்தான் உண்மையான சமதர்ம தமிழீழம் அமையும்'' என்று அம்மா சொல்லி நிறுத்திய போது வியப்புடன் தாயை உற்று நோக்கிய ஜான்சி அம்மா நீங்களே இப்பிடிக் கதைக்கிறது? இவ்வளவு மனக்குமுறல்களையும், எதிர்பார்ப்புகளையும் எப் பிடியம்மா இவ்வளவு நாளும் மனதுக்குள்ளே பூட்டி வைத்திருந்தீங்கள்'' என்று கேட்டாள்.

''பாதிப்பின்ரை உச்சக்கட்டத்திலை தான் போராட வேண்டும் என்ற மனத்தி டமே வரும். நான் வாழ்ந்து முடிச்சவள். நீ வாழப் போகின்றவள். வாழப்போகும் நீ படுகிற கஷ்டங்கள் தான் என்னை இண்டைக்கு இப்பிடி மனநிலை உள்ளதைக் கொட்ட வைத்தது'' என்ற தாயைப் பார்த்து ''அம்மா, நிச்சயமாய் இனியும் உங் கடை மகள் ஜான்சிராணியைப் போலை மனத்திடம் கொண்டவளாய்த் தான் வாழு வாள். இது உறுதி'' என்று ஜான்சி தாயின் தலையில் அடித்து சத்தியம் செய்ய வும் அவளின் அண்ணை வரவும் சரியாக இருந்தது.

''நல்ல முடிவுக்கு வருவாயென்று இவ்வளவு நேரம் அவகாசம் தந்திட்டுப் போனனன். நல்ல முடிவாய் எடுத்திருப்பாயெண்டு நினைக்கிறேன்'' என்று கிண்டல் சிரிப்புடன் கேட்டார் அண்ணை. ''ஓமண்ணை, நான் நல்ல முடிவுக்கு வந்திட்டன்'' என்று ஜான்சி சொன்னபோது ''அது தான் பார்த்தன். அடி உதவுவது போலை அண்ணன் தம்பி உதவ மாட்டினம் எண்டு சொல்லுறது சரிதான்'' என்று சொல்லி மீண்டும் சிரித்தார் அண்ணை.

இன்னும் சிறிது நேரத்தில் எரிமலையாக வெடிக்கப் போகும் அவரை நினைத்து மனதிற்குள் சிரித்துக்கொண்ட ஜான்சி தனது சிநேகிதியிடம் சில நாட்களுக்கு முன் கடனாக வாங்கிய பணத்தில் சிறிது தொகையை எடுத்து அண்ணையின் கை யில் கொடுத்தாள். அவர் அதிசயத்துடன் 'இது என்ன காசு' என்றார். ''இந்தக் காசு நான் இப்ப போட்டிருக்கிற உடுப்பின்ரை காசு. இந்த உடுப்போடை நான் வீட்டை விட்டுப் போறன்'' என்று சொல்லி வாசலை நோக்கி நகர்ந்த ஜான்சி திரும்பிவந்து ''இவ்வளவு நாளும் வைச்சுப் பார்த்ததுக்கு காசு எங்கையெண்டு நீங்கள் கேட்க லாம். இங்கை நான் சும்மா இருக்கேல்லை. வீட்டு வேலையளை அம்மா அண்ணியோடை பகிர்ந்துதான் செய்தன். ஒரு வேலைக்காரிக்கு சம்பளம் குடுக்க வேணும். எனக்கு சம்பளம் தராமல் சாப்பாடு, உடுப்பு தந்தீங்கள். அதனாலை அந்தக் காசு தரவேணு மெண்டில்லை. இந்தக் காசும் தராமல் நான் போகலாம் தான். ஆனால் நாளைக்கு நீங்கள் நான் வாங்கித் தந்த உடுப்போடை தானே போனவள் என்று சொல்லித் திரிவீர்கள். அப்பிடி ஒரு பழிக்கு ஆளாகாமல் இந்தக் காசைத் தந்திட்டுப் போறன்'' என்று சொல்லி விட்டுப் போகப் புறப்பட்ட போது ''நில், ஜான்சி நானும் வாறன்'' என்று சொல்லி மகளைப் பின்தொடர்ந்தாள் தாய்.

''மாமி! மாமி! நில்லுங்கோ நானும் வாறன்'' என்ற குரல் ஜான்சியையும் அவள் தாயையும் திகைக்க வைத்தது. திரும்பிப் பார்த்தார்கள். ஜான்சியின் அண் ணையின் மனைவி அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள். ''அண்ணி நீங்கள்---? கேள்வியை மேலே தொடரமுடியாமல் ஜான்சி நிறுத்தினாள். ''சிலரின்ரை கதைகள் தான் சில உண்மைகளை இண்டைக்கு எனக்கு தெரியப்படுத்தியது. தாய்நாட்டுக் காக போராடவேண்டிய கடப்பாடு ஒரு ஆம்பிளைக்கு இருக்கிறது போலை ஒரு பொம்

பிளைக்கும் இருக்குது. ஆனால் அதை எல்லாரும் ஏற்றுக்கொள்வதில்லை. ஆம்பிளையளிலே பலருக்கே தங்கடை கடமை தெரியிறதில்லை.தங்கடை கடமையை உணர்ந்து பங்காற்ற முயலுகிற பொம்பிளையளையும் விளங்கிக் கொள்ளுறதில்லை. தங்கடை ஆதிக்கத்துக்குக் கீழை இருக்கிற பொம்பிளையளை இதுக்காக வதைக்கவும் தயாராய் இருக்கினம். பெரும்பாலும் ஆதிக்கம் செலுத்துறதையே தங்கடை கடமையாய் கௌரவமாய், பலமாய் நினைக்கிற ஆம்பிளையளிலே தங்கி வாழுறதாலேதான் பல பொம்பிளையளாலே எங்கடை தாய்நாட்டை மீட்டெடுக்கிற போராட்டத்திலே தங்கடை பங்களிப்பை முழுவதும் வழங்கேலாமல் இருக்குது. தங்கடை கால்களிலே ஒவ்வொரு பொம்பிளையளும் நிண்டால் இந்தப் பிரச்சினையே இல்லைத்தானே. இனி நாங்கள் எங்கடை கால்களிலே நிப்பம். அதுக்காக நேர்மையான எந்த வேலையையும் செய்வம். இண்டைக்கு நான் இந்த அடக்கு முறைக்கெதிராகப் போராடாட்டில் என்ரை மகளும் நாளைக்கு அடிமை வாழ்க்கைதான் வாழுவாள். ஒவ்வொரு பொம்பிளையளும் தங்கடை சுகங்களைத் துறந்து போராட முன் வந்தால்தான் எங்கடை பிள்ளையள் சுதந்திரமாய் தமிழீழத்தில் வாழுவினம், தமிழரான எங்களை அடக்கி ஒடுக்கும் சிங்கள அரசாங்கத்தின்ரை அட்டூழியங்களுக்கெதிராய் போராட வேண்டிய நாங்கள் அடக்கி ஆளுதலை இன்பம் காணுகிற ஆண்களின்ரை ஆதிக்கத்துக் கெதிராயும் போராட வேணும்'' என்று சொல்லிக் கொண்டு ஜான்சியின் அண்ணி பின் தொடர்ந்தாள்.

அவர்கள் போவது அதிர்ச்சியைக் கொடுத்தாலும் "இப்பிடி நீங்கள் மூண்டு பேரும் வெளிக்கிட்டுப் போனால் நாளைக்கு இந்த சமூகம் உங்கள்மேலே காறித் துப்பும்'' என்று சீறினார் ஜான்சியின் அண்ணா. "நாங்கள் தவறாய் நடந்தால் தானே எங்களை ஏசிறதுக்கு இந்த சமூகத்துக்கு உரிமை இருக்கு. ஆனால் ஒழுக்கமோ, நேர்மையோ தவறி நாங்கள் நடக்கேல்லையே. நான் வயலிலே வேலை செய்யிற பொம்பிளையளோடை சேர்ந்து வேலை செய்வன். உன்ரை மனிசியும் ஜான்சியும் தைச்சுக் குடுத்து சம்பாதிப்பினம். படிப்புச் சொல்லிக் குடுத்து உழைப்பினம். ஓரளவு காசை மிச்சம் பிடிச்சு ஏதாவது சிறு கைத்தொழிலிலை ஈடுபடுவம். எங்கடை வாழ்வையும் நடத்திக்கொண்டு எங்கடை விடுதலைப் போராட்டத்திலேயும் பங்குபற்றி எங்கடை கடமையைச் செய்வம். இவ்வளவும் நாங்கள் செய்யேக்குள்ளை இந்த சமூகம் ஏளனம் செய்யுமெண்டால் அதுக்காக நாங்கள் கவலைப்பட மாட்டம். நாங்கள் தவறு செய்யேல்லை என்கிறதை இந்த சமூகம் விளங்கிக் கொள்ளும் வரைதான் கஷ்டம். பிறகு இந்த சமூகம் எங்களோடை சேர்ந்துவிடும்'' இப்படிச் சொல்லியபடி நிமிர்ந்து செல்லும் தாயையும் அவளைப் பின்தொடர்ந்த மனைவியையும் தங்கையையும் பார்த்தபடி விக்கித்து நின்றார் ஜான்சியின் அண்ணா.

**பெண்கள் போர்க் கொடி உயர்த்த வேண்டியது**
**ஆண்களுக்கெதிராக அல்ல,**
**ஆண் ஆதிக்கத்திற் கெதிராகத் தான்.**

# சின்னம்மாக்காவும் சித்திராப் பெண்ணும்

உரையாடல் சித்திரம

**சின்னம்மா:-** என்னடி பிள்ளை சித்திரா இந்த இயக்கப் பொடியங்களெல்லாம் வெளிநாடு போய்க் கொண்டிருக்கிறுங்களாம். அப்பிடியெண்டால் எங்கடை கெதி?

**சித்திரா:-** இப்ப இப்பிடிக் கதைச்சு என்ன செய்யிறது? எல்லாம் உங்களைப் போன்றவையிலைலை தானே வந்தது.

**சின்னம்மா:-** என்னடி பிள்ளை? புதுக்கதை சொல்லுறுய்.

**சித்திரா:-** நீங்களெல்லாம் உங்கடை உங்கடை குடும்பம் நல்லாயிருந்தால் காணுமெண்டு நினைச்சீங்கள். அவங்கள் எங்கடை நாட்டின்ரை மீட்சியை வளத்தை நினைச்சு இயக்கங்களிலை சேர்ந்தாங்கள். எப்பிடியும், மக்களெல்லாம் ஒண்டாய் இணைஞ்சு தங்களோடை போராடுவினம் எண்டு எதிர்பார்த்தாங்கள். எல்லாரும் உங்கடை உங்கடை சுகத்தை மட்டும் தான் இன்னும் பார்த்துக் கொண்டிருக்கிறீங்கள்.

**சின்னம்மா:-** நீ இப்படிச் சொல்லுறுய். ஆனுல் சனம் வேறை ஏதோவெல்லோ கதைக்குது. ஏதோ ஒவ்வொரு இயக்கங்களுக்குள்ளையும் மோதலாம்.

**சித்திரா:-** சரியணை ஆனுல் அதுதான் முழுக்காரணமெண்டு சொல்லேலாது, அந்தப் பக்கத்திலை ஏமாற்றமெண்டால் இந்தப்பக்கத்திலையும் ஏமாற்றமெல்லோ. சனங்களாவது ஒண்டு சேர்ந்து போராடத் தயாரெண்டால் அவங்கள் ஏன் விரக்தியடைஞ்சு வெளிநாட்டுக்குப் போறுன்கள்.

**சின்னம்மா:-** என்னதான் சொல்லு பிள்ளை. நான் ஒண்டு சொல்லுறன். வெளிநாட்டுக்குப் போறவங்களெல்லாம் ஏமாத்துக்காரன்கள், தங்களை மட்டும் வாழவைக்க வெளிநாட்டுக்கு ஓடுறுன்கள்.

**சித்திரா:-** இஞ்சை இருக்கேலாட்டில் என்ன செய்யிறது?

**சின்னம்மா:-** இஞ்சை என்ன பெரிசாய் இருக்கேலாது. நாங்களும் இருக்கிறம் தானே. இப்ப தமிழ்ச்சனம் எல்லாமே அரசாங்கத்துக்கு பயங்கரவாதிகள் தானே. எங்களுக்கும் சாவு வரும்தான். அவங்களுக்கும் சாவு வரும்தான்.

**சித்திரா:-** அப்ப சின்னம்மாக்கா நீங்கள் என்னதான் சொல்லுறீங்கள்?

**சின்னம்மா:-** விமோசனமே இல்லை எண்டு இருந்த எங்களுக்கு நம்பிக்கை ஒளியைத் தந்து கூட்டிக் கொண்டு வந்திட்டு இடைநடுவிலை இப்பிடி விட்டிட்டுப் போனுல் எங்கடை கெதிஎன்ன? அவங்கள் ஆரோ பிழை விடுறுங்கள் எண்டு எங்களை தங்கடை கப்பலிலை கூட்டிக்கொண்டு போறம் எண்ட பொடியங்கள் இப்ப இப்பிடி நடுக்கடலிலை எங்களை விட்டிட்டு தாங்கள் தனித்தனி படகிலை தப்பிப் போறுங்கள். இனி நாங்கள் அமிழ வேண்டியதுதானே.

**சித்திரா:-** நீங்கள் சொல்லுறது சரிதானணை. ஆனுல் இயக்கங்களை விட்டு விலகின பிறகு அவங்கள் தங்கடை வாழ்க்கைப் பாட்டையெல்லோ

பார்க்க வேணும் அதுக்காக உழைக்க வெளிநாட்டுக்கு போகத்தானே வேணும்.

**சின்னம்மா:-** உண்மையாய் இந்த நாட்டின்ரை விடுதலையை நேசிச்சு இயக்கங்களிலே சேர்ந்தவங்கள் எந்த இயக்க மோதலெண்டாலும் வெளிநாட்டுக்குப் போக மாட்டாங்கள். இந்த மக்களோடை இருந்துதான் சாக நினைப்பாங்கள். இயக்கங்களை விட்டு விலகினவங்கள் இந்த நாட்டிலே இருந்து கொண்டே தனக்காகவும் உழைச்சு நாட்டுக்காகவும் பாடுபடலாம்தானே.

**சித்திரா:-** இஞ்சை இருந்து கொண்டு என்ன செய்யிறது? ஒரு வேலையும் செய்யேலாது. எல்லாத்துக்கும் சிங்கள நாட்டையெல்லே எதிர்பார்த்துக் கொண்டு இருக்க வேண்டியிருக்குது.

**சின்னம்மா:-** இதெல்லாம் சாட்டு. ஆரையும் நம்ப வேண்டாம். இந்த மண்ணை நம்பலாம் தானே. விவசாயம் செய்ய சோம்பல் படாட்டில்சரி. ஆர் ஏமாத்தினாலும் இந்த மண் எங்களை ஏமாத்தாது.

**சித்திரா:-** ஓம் சின்னம்மாக்கா, நீங்கள் சொல்லுறதும் சரிதான். ஆனால் எங்கடை பொடியன்களை விரக்தியடையாமல் செய்யிறது எங்கடைசனத்தின்ரை கையிலே தானிருக்குது.

**சின்னம்மா:-** ஓம்பிள்ளை, சனங்களெல்லாம் ஒண்டு சேர்ந்து விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளத் தயாரென்கிறதை உணர்த்தினால் பொடியங்கள் இயக்கங்களை விட்டு விலகமாட்டாங்கள்.
'வாழ்விலையும் சாவிலையும் எங்களோடையே இணைஞ்சு இருப்பாங்கள்' எண்டால் ஒரு சுமைகூட சாவுக்குப் பயப்படாது. எல்லாரும் ஒண்டு சேர்ந்து போராட முன்வருவினம்.

---

## நீதிக்கெதிராக இங்கு சிலரின் போராட்டம் அநீதியின் பக்கம் மக்களென்றால்.....எதிர்காலம்...?

**ஆதாரமே காவலாக உள்ள ஓர் ஊரிலே ஓர் இளம்பெண் ஒருவரால் பலாத்காரம் செய்யப்பட்டாள். அந்த நபரோ அவ்வூரிலே உள்ள பணக்காரப் புள்ளிகளில் ஒருவர். அவர்தான் தன்மேல் குற்றம் புரிந்தவர் என்பதை அப்பெண் சொல்லியும் எவரும் நம்பவில்லை. தொழிலாளிகள் உட்பட மக்கள் எவரையும் தன்பக்கம் சேரவைக்க அவருக்கு பின்பலமாக இருந்தது அவரிடமுள்ள பணமும் அதிகாரமுமேயாகும்.**

# திருந்தினுல் திருத்தலாம்

- சத்தியா -

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மையும் பிணைத்துக் கொள்ளத் துடிக்கும் பெண்கள் பல திசைகளிலும் பல போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கும் பெற்றோர் உள்ள பெண்கள் உட்பட ஏற்றுக் கொள்ளாத குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் இன்று பல வழிகளில் தம் போராட்டத்தை நிகழ்த்த வேண்டியுள்ளது. பெற்றோர் விடுதலை ஸ்தாபனங்களை ஆதரித்தாலும் அந்த ஸ்தாபனத்தில் தம் பெண்கள் இணைந்து வேலை செய்வதை விரும்புவதில்லை.

அப்படி அவர்கள் விரும்பாததற்குக் காரணம் தம் பெண்களின் உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்பதற்காக அல்ல. சமூகம் தம் பெண்ணைப் பழிக்கும் என்றுதான் பெரும்பாலான பெற்றோர் தம் பெண்ணை விடுதலை ஸ்தாபனங்களில் இணைந்து வேலைசெய்ய விடுவதில்லை. அந்த விடயத்தில் பெற்றோருக்குச் சொல்லக்கூடியது ஒன்றுதான். "விடுதலை உணர்வு மிக்க ஒரு பெண் அந்த விடுதலைக்கான போராட்டத்தில் தம் பங்களிப்பை செய்யத்தான் செல்கின்ருர்களேயன்றி தவறுகள் எதுவும் புரிவதற்காக அல்ல" என்பதைஒவ்வொரு பெற்றோரும் நினைவில் நிறுத்திக் கொள்ளவேண்டும். நல்லதையே செய்யச் செல்லும தம் பெண்மேல் திடமான நம்பிக்கை வைத்திருந்தால் சமூகம அவளைப்பற்றி-என்ன சொன்னலும் வருந்தவேண்டிய அவசியமில்லை. சமூகம் சொல்லும் எல்லாவற்றையும் நிராகரிக்க முடியாது. அதேவேளை எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. அதேசமயம் விடுதலை ஸ்தாபனத்தில் இணைந்து வேலை செய்யச் செல்லும் பெண்கள் சமூகம் பழிக்கும்படி நடக்கக் கூடாது. தம்பெற்ருேர் தமக்குத்தந்த சுதந்திரத்தை தவருன விதத்தில் பயன்படுத்தக் கூடாது. அடைய வேண்டிய இலட்சியத்திற்காக உழைப்பதை விடுத்து வேறு பாதைகளில் செல்லக்கூடாது.

விடுதலை இயக்கங்களில் இணைந்து வேலை செய்யும் பெண்கள் தவருக நடக்கின்ருர்கள் என்று பலர் கூக்குரலிட்டுக் கொண்டு இருக்கிருர்கள். அவர்கள் சத்தமிடுவதில் தவறு இல்லை என்று எண்ணத் தோன்றும் வகையில் சில பெண்களும் நடந்து கொள்கிருர்கள். ஓர் விடுதலை ஸ்தாபனப் பெண் பின்வரும் அம்சங்களைக் கவனத்திற் கொள்வது நல்லது.

(1) ஆடம்பர உடை அணிந்து அலங்காரங்கள் அதிகம் செய்துகொண்டு திரியாமல் எளிமையான உடை அணிந்து எங்கும் செல்வது சிறந்தது,

(2) எவ்விதக் கஷ்டங்களையும் தாங்கிக்கொள்ளக் கூடியவர்களாக இருத்தல் அவசியம், எதனைக்கண்டும் அருவருப்புக் கொண்டு முகம் சுளித்து மற்றவர்களின் மனதைப் புண்படுத்துபவர்களாக இருக்கக் கூடாது.

(3) தமிழீழ மக்களுக்கென்று ஓர் பண்பாடு கலாச்சாரம் இருக்கவேண்டும் என்பதை மறந்து, மறுத்து எமது நாட்டுக்குப் பொருத்தமில்லாத, எமது நாட்டுக்கு ஒத்துவராதவைகளை தழுவிக்கொள்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இப்படி இங்கே கூறுவதோடு மீண்டும் அடிமைகளாக பண்பாடு, பண்பாடு என்று பாழும் கிணற்றுக்குள் விழச் சொல்லுகிருர்களா என்ற கேள்வி பலர் மனதில் எழலாம். எம் மண்ணுக்கென்ருெரு பண்பாடு, கலாச்சாரம் இருக்கிறது. அதனை ஒதுக்கி உதற தமிழீழ குடிமகனுக்கோ, குடிமகளுக்கோ உரிமையில்லை. வேற்று நாட்டார் உடையலங்காரம், கையலங்காரம் உட்பட அனைத்து அம்சங்களையும் அப்படியே கைக்கொள்பவர்களாக இன்று பலர் இருக்கிருர்கள். இதே நிலை தொடருமாஞல் எமது நாட்டுக்குரிய பண்பாடு, கலாச்சாரத்தின் எச்சங்களே கூட மிஞ்சாது. இதனைத்தாஞ எதிர்கால சுதந்திர தமிழீழப் பிரஜைகளுக்கு கையளிக்கப் போகிருேம். இதனை ஒருகணம் எண்ணிப் பார்ப்போமாஞல் எமது தவறுகள் எமக்குப் புரியும்.

சிலபெண்களின் நடத்தைகளினுல் எல்லா விடுதலை 'ஸ்தாபனப் பெண்களும் பொதுமக்க

ளின் கேலிக்கும், கிண்டலுக்கும், ஏச்சுக்கும் உள்ளாகி வருந்துகிறார்கள். தவறு விடும் பெண்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத்த முயன்றால் தான் பெண்களின்மேல் பெற்றோரோ பொதுமக்களோ சுமத்தும் பழிச்சொற்களை நீக்கலாம். பெற்றோரும் பொதுமக்களும் பெண்களின் போராட்ட உணர்வை விளங்கிக்கொண்டு அவர்களை ஊக்குவிக்க வேண்டும். ஆதரவு கொடுக்க வேண்டும்; அதனை விடுத்து அவர்களை அடித்து வதைப்பார்களானால் அவர்கள் வீட்டை விட்டு வெளியேறவும் தயாராகி விடுகிறார்கள். இன்று பல பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறி விடுதலை ஸ்தாபனங்கள் அல்லாத சில குழுக்களில் இணைந்து மானம் இழந்து மரணிப்பதற்கு பெற்றோரே காரணமாகின்றனர்.

தமிழீழத்தில் பிறந்த இளைஞர் யுவதிகளுக்கு விடுதலை உணர்வு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. தமிழீழ குடிமகனாகவோ குடிமகளாகவோ பிறந்த ஒவ்வொருவருக்கும் தமது தாயகத்தை அந்நியனிடமிருந்து மீட்கவேண்டிய கடமைப்பாடு உள்ளது. அதனை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இந்த உண்மையை பொறுப்பை உணர்ந்து கொண்ட எந்த ஒரு தமிழீழப் பிரஜையும் தம் மகனோ, மகளோ, சகோதரனோ, சகோதரியோ விடுதலை ஸ்தாபனம் ஒன்றில் இணைந்தால் ஏசவோ, அடிக்கவோ, துரத்தவோ மாட்டார்கள்.

# இவர்கள் . . . . ?

*அண்மையில் ஆசிரியர்களுக்கான மூன்றுவார பயிற்சி வகுப்புக்கள் சில இடங்களில் நடந்தன. அங்கு ஓரிடத்தில் தேசியக்கொடி ஏற்றி நிகழ்ச்சியின் போது அதனை ஏற்றி வைத்து பேச முன்வந்த ஓர் தமிழ்பெண் தன் தாயை மறந்து, ஆம் தாய்மொழியை மறந்துவிட்டார். ஸ்ரீலங்கா தேசியக்கொடி ஏற்றிவைத்து சிங்கள மொழியில் பேசிய அப்பெண்ணைப் புகைப்படம் பிடித்தோர் ஸ்ரீலங்கா அரசுக்கு சார்பானவர்கள் என்பது சொல்லாமலே விளங்கக்கூடியது. இன்னுமொரு நாள் வேறு ஒரு தமிழ்ப்பெண்ணுக்கு ஸ்ரீலங்காவின் தேசியக்கொடி ஏற்றும் நிலை ஏற்பட்டது. அவர் தமிழிலேதான் பேசினார். சிங்கள மொழியில் பேசும்படி கூறப்பட்ட போதும் பேச மறுத்துவிட்டார். அதனால் தொடர்ந்து எந்த ஒரு தமிழ்ப்பெண்ணோ, ஆணோ தேசியக்கொடி ஏற்றிப் பேச அனுமதிக்கப்படவில்லை.*

*எந்த ஒரு மொழியையும் எங்கும் எவருடனும் பேச எவருக்கும் சுதந்திரம் உண்டு. ஆனால் தம்மைப் பிரபலப்படுத்திக் கொள்ள; ஸ்ரீலங்கா அரசினைப் போற்றுபவர் தாம் என்பதைத் தெரியப்படுத்தி அதனால் தாம் போற்றப்பட வேண்டும் என்பதற்காக அவ்வரச மொழியைப் பேசுவது வெட்கப்பட வேண்டியதும், வேதனை தரக்கூடியதுமாகும்.*

**எந்த மொழியும் எவருக்கும் எதிரி அல்ல என்பவர்களுக்கு
எல்லா மொழி பேசுவோரும் நண்பர்களே. ஆனால்
சொந்த மொழி பேசுவது கௌரவக் குறைவு என்று
எண்ணுபவர்களுக்கு எல்லோரும் எதிரிகளே.**

# ஆரோக்கியமான தமிழீழத்தை அமைக்கப் பாடுபடுவோம்

தமிழீழ விடுதலைக்காக மக்கள் நாங்கள் போராடிக்கொண்டிருக்கிறோம். பெறப்போகும் சுதந்திரத்தைப் பேணிக் காக்கவேண்டியது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் முக்கிய கடமையாகும். அதற்கு அமையவிருக்கும் தமிழீழத்தில் அனைத்து மக்களும் உடலுறுதியும் உளவலிமையும் கொண்ட சுகநிலையுடையவர்களாக இருக்கவேண்டும்.

இன்றைய போராட்ட நிகழ்வுகளால் தவிர்க்க முடியாதவாறு சில சமூகங்களின் வழமையான வாழ்க்கை முறை முற்றாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆனாலும் அந்தச் சமூகங்களின் இன்றைய சிறார்களே நாளைய பெரியவர்கள் ஒட்டு மொத்தமாக அனைத்து சமூகங்களிலுமுள்ள சிறுவர்களும், இளைஞர்களும், யுவதிகளும் உடல் உள உறுதியுடையவர்களாக, திடகாத்திரமானவர்களாக இருத்தல் அவசியம்.

நமது போராட்டம் வெறும் மண்ணை மீட்கவல்ல. தமிழனின் தலையெழுத்தையே மாற்றியமைப்பதற்குத்தான். ஸ்ரீலங்கா இனவாத அரசின் ஆட்சியில் அகப்படாமல் இருப்பதற்கே. நம்மை நாம் காப்பாற்றிக் கொள்வதற்கே. நமது மக்கள் அனைவரும் தேகாரோக்கியமும், திடகாத்திரமும், உடையவர்களாக இருந்தாலே நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும் எம் நாட்டை அபிவிருத்தி செய்யவும் முடியும். தேகாரோக்கியமும் திடகாத்திரமும் நிறையச் சாப்பிட்டு விட்டு வீட்டில் சோர்பித் தூங்கிக் கிடந்தால் கிடைத்துவிடாது.

உடற் தசைகள் பயிற்சி பெறுவதனாலேயே வலுவடைந்து உறுதி பெறுகின்றன. பயிற்சி என்பது நாளாந்தம் கடுமையான வேலைகளில் ஈடுபடுவதாலேயோ சிறுவர்களாயின் விளையாட்டுக்களில் ஈடுபடுவதாலேயோ பெற்றுக் கொள்ளமுடியும். இது பெண்களுக்கு விதிவிலக்கல்ல. உடற்பயிற்சி எப் பருவத்தினருக்கும், எப்பாலாருக்கும் தேவையானது. ஆகவே சிறுவர், சிறுமியர், யுவதிகள், இளைஞர்கள் வேலைகளிலீடுபடுவதும் விளையாட்டுக்களில் ஈடுபடுவதும் ஒவ்வொருவரினதும் சிறப்பான கடமையாகும்.

உடற்பயிற்சியிலிருந்து நாம் விரும்பிய பலனைப் பெறவேண்டுமாயின் அது சீராகவும் ஒழுங்காகவும், நியதி தவறாமலும் செய்யப்பட வேண்டும். அன்றொருநாள், இன்னொருநாள் என்று பயிற்சி செய்தால் பயனிலும் தீமையே பெரிதும் ஏற்படும். எந்தத் தசையையும் பயிற்சியினால் பெரிதாக்கலாம், ஆனால் தசைகள் பெருப்பதற்கும் ஓர் எல்லையுண்டு என்பதையும் அளவுக்கதிகமான பயிற்சியினால் அத்தசைகள் தேய்ந்து, வலுவிழந்து போகின்றன என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

விளையாட்டுக்களில் கிளித்தட்டு, கிட்டிஅடித்தல், வார்ஓடுதல், நீந்துதல், நடத்தல், உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் என்பன உடலிலுள்ள தசைகளெல்லாவற்றிற்கும் ஒரே நேரத்தில் பயிற்சியளிக்கவல்லன. எல்லா உறுப்புகளுக்கும் பயிற்சி தருவதனால் இவை ஏற்ற நல்ல விளையாட்டுக்களாகும். இவை போன்ற விளையாட்டுகளினால் உண்டாகும் நன்மைகள்.

(1) உடற்றசைகள் நன்றாக வளர்ந்து உறுதியும் உரமும் பெறும்.

(2) நமது சித்தத்தின் ஆட்சிக்குட்பட்டுத் தசைகளியங்க முடியும்.

3) இதயத்துடிப்பு அதிகரிப்பதனுல் சுவாசம் அதிகரிக்கும். குருதி உடலெங்கும் விரைவாக ஓடும். குருதியின் மாசுக்கள் அகற்றப்படும். ஆகவே கழிவுப்பொருட்கள் உடலைவிட்டு கழிந்து போகும். இதயம், நாடி, நாளம் என்பவற்றின் தசைகள் பலமடையும்.

4) உட்சுவாச, வெளிச்சுவாச வளியின் கனவளவு அதிகரிக்கும். ஒரு மனிதன் சாதாரண நிலையில் 480 கன அங்குலம் உட்சுவாசிக்கிறுன். உடற்பயிற்சியின் போது 1550 - 3250 அங்குலம் உட்சுவாசிக்கிறுன்.

5) மலச்சிக்கல், சமிபாடடையாத குறைபாடு என்பன உண்டாகாது. பசியுண்டாகும்.

6) நரம்புகளுக்கு பலமும் ஊக்கமும் அளிகும்.

7) நோய் தாங்கும் வலு அதிகரிக்கும்.

8) திடமான உடலில் திடமான மூளையும், மனமும் இருக்குமாதலால் மனநலம் விருத்தியடையும்

9) சிறுநீரகம் நன்ருக வேலை செய்வதனுல் சிறுநீர் நன்ருகக் கழியும்.

10) வாழ்நாள் முழுவதும் நோய் நொடியின்றி மற்றவர்களுக்கு சுமையாயிருக்காது காலங் கழிக்கலாம்.

**உறுதி பெறுவோம் உரம் பெறுவோம்**
**இறுதிவரை போராடுவோம்.**

நம்பிக்கையை ஊட்டவேயன்றி
அணைத்து விடவோ அழித்து
விடவோ எவருக்கும்
உரிமை இல்லை.

## ...... வரும் வரைக்கும் மட்டும் எங்கள் இராச்சியம்

*யாழ்ப்பாணத்தில் இராணுவம் முன்பு போல் உள்ளே நுழைந்து அட்டூழியங்கள் செய்வதை விடுதலைப் போராளிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்ற துணிச்சலில் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைக்காத முன்னணிகள், பேரணிகள், பேரவைகள் என்று பல அமைப்புகள் இன்று அறிக்கைகள் விடுவதும், மறியற் போராட்டங்கள் நடத்துவதும், பிரார்த்தனை செய்ய ஒழுங்கு படுத்துவதுமாக உள்ளன. விடுதலை இயக்கங்களின் எந்த நல்ல செயற்பாடுகளேயும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கண்டிப்பதும் இந்த அமைப்புகளின் செயற்பாடுகளில் முக்கியமானதாகும். இவ்வளவும் இராணுவம் உள்ளே வரும் வரைதான். உள்ளே இராணுவம் நுழைந்துவிட்டால் முதலில் பதுங்கி மறைந்து விடப் போகின்றவர்கள் இவர்களாகத் தான் இருப்பார்கள்.*

# முகமூடிகள் கிழிகின்றன

— யோகினி —

சில மாதங்களின் முன் சில இடங்களில் மட்டும் விநியோகிக்கப்பட்ட 'பெண்களுக்கோர் எச்சரிக்கை'யைப் படித்த சில 'புடம்போட்ட தங்கங்'களின் கருத்துக்கள் இதோ.

(1) எனக்கு இந்த எச்சரிக்கை சொல்லப்படவில்லை. எதற்காக நான் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(2) இவற்றில் கூறப்பட்டுள்ளவை நல்லவை தானே. இனியாவது பெண்கள் வீட்டில் அடங்கி ஒடுங்கி இருக்கட்டும்.

(3) தவறு செய்கின்றவர்கள் திருந்தட்டும் என்றுதானே இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அதன்படி நடந்தால் நல்லது தானே.

இப்படிக் கூறியவர்கள் எல்லோரும் பெண்களே. இவர்கள் தம் சுதந்திரத்திற்கு வந்திருக்கும் ஆபத்தை உணராதவர்கள் மட்டுமல்ல, தம்மீது திணிக்கப்படும் அடக்கு முறையை வரவேற்பவர்கள். பெண் அற்பப் பொருளாகக் கருதப்படுவதை ஆனந்தத்துடன் ஏற்றுக் கொள்பவர்கள். தன்னைப் பற்றித் தான் நினைப்பவர்களே தவிர தம் இனத்தைப் பற்றிச் சிந்திக்காதவர்கள். இப்படிப் பட்டவர்கள் தமது மண்ணைக் கூட நேசிக்க மாட்டார்கள்.

"நான் பாதிக்கப்படவில்லைத்தானே" என்று அன்று ஒவ்வொரு இளைஞர்களும் தமது தமது வேலைகளைப் பார்த்துக் கொண்டு தாம் சுகமாக வாழ வழிவகை தேடிக்கொண்டு சென்றிருப்பார்களேயானல் இன்று 'தமிழீழ விடுதலை' என்ற சொற்பதம் கூட எவர் வாயிலிருந்தும் வந்திருக்காது. ஸ்ரீலங்கா முதலாளித்துவ அரசாங்கத்தால் விலங்கிலும் கீழான அற்பப் பொருளாக, அடிமைகளாக கணிக்கப்பட்டு வாழ்வதே வாழ்வு என்ற மாயையில் சிக்கியே வாழ்ந்து கொண்டிருப்பார்கள் எம் மக்கள். அப்படியில்லாமல் 'எமது மண்' என்று இன்று பெரும்பாலானேர் சிந்தித்து, தமது தாயகத்தை நேசித்து, தமது மண்ணின் மீட்சிக்காகத் தாம் பாடுபடுவது தம் உயிரிலும் மேலான கடமை என்று எண்ணிச் செயற்படுகின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் தன்னைப்பற்றிச் சிந்திக்காமல் தம்மைப்பற்றி,தன் நாட்டைப்பற்றிச் சிந்தித்த விடுதலைப் போராளிகள்தான் என்பதை 'மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள்' போன்றவற்றைக் கூறிக்கொண்டு 'தம்மைப் புனிதமானவர்கள்' என்று கருதிக் கொண்டிருப்பவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள், தமக்குப் பாதிப்பு வரும் என்று எண்ணியவர்கள் தான் விடுதலை ஸ்தாபனங்களில் உள்ளார்கள் என்று சில 'அறிவாளிகள்' விமர்சிப்பார்கள். விடுதலை இயக்கங்களில் எத்தனையோ பணம் படைத்த முதலாளிகளின் பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்கள் நினைத்திருந்தால் தமது பணபலத்தால் வெளிநாடுகளுக்குச் சென்று சுகமாக வாழ்ந்திருக்கலாமே. அவர்கள் தம் நலனை மட்டும் சிந்தித்திருந்தால் அப்படித்தான் செய்திருப்பார்கள். ஆனல் அவர்கள் தம் நாட்டின் மீட்சியை, தம் மக்களின் விடுதலையை, தம் இனத்தின் சுதந்திரத்தை நினைத்தவர்கள், அதற்காக தம் உயிரையும் கொடுக்கத் தயாராய் இருப்பவர்கள்.

முன்னைய காலங்களில் பெண்கள் வீட்டிற்குள்ளேயே அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டார்கள் அதனால் அவர்கள் வெளியில் செல்லவேண்டிய தேவையே ஏற்படவில்லை. ஆனால் இன்றோ பெண்கள் பங்குபற்றாத துறைகள் சொற்பமே. அதனால் வெளியே அலைந்து திரிந்து வேலை செய்பவர்கள் எல்லோரும் ஒழுக்கங் கெட்டவர்கள் அல்ல. 'ஆடைபாதி, ஆள்பாதி' என்பது சரிதான். அதற்காக முழுப்பாவாடை அணிந்தால் தான் பெண்கள் நல்லொழுக்கம் உள்ளவர்கள் என்று கூறுவது மிக மிக மடைத்தனமானது. [கட்டளை I:- வயது வந்த பெண்கள் முழுப்பாவாடை அணிய வேண்டும்] தவறு செய்பவர்கள் இந்த எச்சரிக்கைக்கு கீழ்ப்படிந்து நடந்து கொண்டும் தவறு செய்யலாம். தப்புச் செய்பவர்களுக்கு இந்த எச்சரிக்கையெல்லாம் ஒரு பொருட்டு அல்ல. தவறு செய்யும் சில பெண்களுக்காக பெண் இனத்திற்கே ஓர் எச்சரிக்கை விடுவது ஓர் சமூக விரோதச் செயலே.

பெண்களைப் பொறுத்த அளவில் அணியும் ஆடையில், நெற்றியில் இடும் பொட்டில், கூந்தல் அலங்காரங்களில் கவனம் செலுத்துவது நல்லது. ஒரு தமிழ்ப் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்றால் எங்கே தேடிக் கண்டுபிடிக்கலாம் என்று அந்நிய தேசத்தவர் கேட்கும்படி வைக்கக் கூடாது. எங்கள் பண்பாட்டுக்கேற்ப ஆடை அணிந்து அலங்காரம் செய்து கொள்வதால் நாங்கள் மீண்டும் அடிமைகளாக்கப் படுகிறோம் என்பது கருத்தல்ல. பொருளாதார நிலைமை இடம் கொடுக்காததன் காரணமாக சேலை அணிவது கஷ்டம் என்று திருமணமான பெரும்பாலான பெண்கள் சொல்வது முற்று முழுவதுமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய விஷயமல்ல. பெண்கள் தாம் அணியும் ஆடைகளை ஆண்களின் உணர்ச்சிகளைத் தூண்டி வெறி கொள்ள வைக்கும் விதத்தில் அணிந்து கொள்ளாமல் அடக்கமாக, எளிமையாக அணிந்து கொள்வது நல்லதுதானே.

'எங்களுக்கு வியர்க்கும்; அதனால் நோய் வரும்; எங்கள் வேலைகளோடு கூந்தலில் கவனம் செலுத்துவது கஷ்டம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு பல பெண்கள் இன்று கூந்தலை கழுத்தளவில் வெட்டிக் கொள்கிறார்கள். இந்தப் போலிச் சாட்டுகளெல்லாம் சிரிப்புக் குரியவை. மக்களுள், அதனுள்ளும் பெண்களுள் நாங்கள் வித்தியாசமானவர்கள்' என்று மற்றவர்களுக்கு தெரியப்படுத்தத்தான் இந்த அலங்காரமா?

எமது தேசிய விடுதலைக்கான போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் எமது தேசிய இனத்தின் பண்புகளில் ஒன்றான கலாச்சாரக் கூறுகளில் ஏற்படும் மாற்றங்கள் தேசிய இனம் என்ற சொல்லிற்கே அர்த்தமில்லாமல் பண்ணிவிடும். இது சிறிய, சிறிய மாற்றங்கள்தானே என்று சிலர் முணுமுணுக்கலாம். சிறு பொறிதான் பெருந்தீயாக மாறுவது என்பதை நினைவில் கொள்வது நல்லது எதுவோ சொல்ல வந்து வேறு எதுவோ சொல்லப்படுகிறது என்று சிலர் முணுமுணுப்பது காதில் கேட்கிறது. ஆடை அலங்காரம் பற்றி இவ்விடத்தில் சொல்லவேண்டிய சந்தர்ப்பம் வந்ததால் இங்கு சொல்லப்பட்டது.

அவ்வெச்சரிக்கையில் ஓர் கட்டளை இப்படி அமைந்திருந்தது. ''ஒழுக்கமான பிள்ளைகளாயிருந்தால் வாலிபர்கள் சீதனம் இன்றியுக் திருமணம் செய்வார்கள்''
இதனைப்பார்த்த பெண்களின்[முக்கியமாக சீதனம் கொடுத்து பெண்களை மணம் முடித்து கொடுத்து தங்கள் கௌரவத்தை மேலும் உயர்த்த எண்ணும்] பெற்றோரின் மனதில் இப்போது ஓர் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. நல்லொழுக்கமுள்ள பெண்களைச் சீதனமின்றித் திருமணம் செய்ய வாலிபர்கள் தயார் என்று கூறும் போது சீதனம் கொடுத்து திருமணம் செய்யப்படும் பெண்கள் ஒழுக்கமில்லாதவர்கள் தானே? என்ற சந்தேகம் பலர் மனதில் எழலாம் என்ற பயம் பெண்களைப் பெற்றவர்களில் சிலருக்கு ஏற்பட்டுள்ளது. சீதனம் ஒழுக்கக் கேட்டை மறைக்கப் பாவிக்கப்படும் ஓர் சாதனமா என்ற கேள்வி பலர் மனதில் எழுவது தவிர்க்கமுடியாதது.

5வது கட்டளை இப்படி உள்ளது.
'தேவையில்லாமல் கண்ட இடங்களில் காணும் பெண்களுக்கு அடிகொடுக்கப்படும்'

ஒருவருக்கு ஏற்படும் தேவையும் தேவையின்மையும் அவரவரைப் பொறுத்தது. அதனை விடுத்து தேவையில்லாத இடங்களில் காணப்படும் பெண்களுக்கு அடி கொடுக்கப்படும் என்று கூறுவது பெண்களை நாயிலும் கடைப்பட்டவர்களாக நினைக்கும் ஒடுக்குமுறை மனோபாவத்தின் வெளிப்பாடே. இந்த வன்முறையாளர்களின் மனோபாவத்தை அப்பாவிப் பெண்கள் பலரால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. தமிழன் ஒருவனை அன்னியன் ஒருவன் அவன் இனத்தின் பெயரைக் கூறி கேவலமான வார்த்தைகளால் ஏசுகின்றான் என்றால் அது முழுத்தமிழினத்தையுமே ஏசியதற்கு சரி என்பது விளங்காமல் ஒவ்வொரு தமிழனும் தன்னை ஏசவில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பது எவ்வளவுக்கு நகைப்பிற்குரிய விடயமோ அப்படித்தான பெண்களுக்கோர் எச்சரிக்கையை தமக்கு இல்லை என்று சில பெண்கள் சொல்லிக் கொள்வதும் சிரிப்புக்குரிய விடயமாகும்.

'பெண்களுக்கோர் எச்சரிக்கை' பிரசுரம் முட்டாள்கள் சிலரால் வெளியிடப்பட்டிருப்பதால் அதனை கருத்தில் எடுக்காமல் தள்ளி விடலாம். ஆனால் அந்தப் பிரசுரம் வந்ததால் தான் எமது பெண்களின் நிலைப்பாட்டை எம்மால் விளங்கிக் கொள்ள முடிந்தது. அந்த அளவில் அந்தப் பிரசுரம் நன்மையையே செய்திருக்கிறது. தூங்கிக் கொண்டிருக்கும் பெண்களின் வீதம் அதிகம் என்பதனை அறியத் தந்துள்ளது.

---

# அவளுக்குத் தெரியும்

*பொறுமை - பெண்ணின் பெருநகை*
*அடக்கம் - அவளின் அரும் குணம்*
*மென்மை - மங்கையின் இயல்பு.*
*மூன்றில் ஒன்று குறைந்தாலும்*
*பெண்ணுக்கு இடப்படும் பெயர்*
*பேய் - அடங்காப் பிடாரி*
*அநீதியை கண்டு அவள் குமுறினால்*
*அவளுக்கு இடப்படுவது பேய்.*
*அதிகாரத்திற்கு அவள் அடிபணியா விடில்*
*அவள் பிடாரி*
*மென்மை இயல்பை அவள் இழந்தால்*
*அவள் ஓர் அரக்கி.*
*'அடக்கு முறைக்கு எதிராக*
*அவளால் போராட முடியாது.*
*ஏனென்றால் அவள் மென்மையானவள்'*
*இவ்வாறு கூறுபவர்கள் யார்?*
*உதரத்தில் பத்து மாதம்*
*பொறுமையுடன்*
*அவர்களால் சுமக்கப்பட்டு*
*மரணத்தின் வாசலுக்கு*
*ஓர் கணம் அவர்களை அனுப்பி*
*மீண்டும் பூமிக்கு அழைத்த*
*பேராளர்கள் தான் சொல்கிறார்கள்.*
*ஜீவ மரணப் போராட்டம் நிகழ்த்தி*
*தன்னை பூமியில் பிறக்க வைத்த*
*அன்னையின் இனத்திற்கு*
*அவர்கள் கூறுவது*

*மென்மையானவர்கள் நீங்கள்'*
*மென்மை வேண்டும் பெண்ணுக்கு*
*அது எப்போது? எங்கே? என்று*
*அவளுக்குத் தெரியும்.*
*அடக்கம் என்பதன் பொருளும்*
*அவளுக்குத் தெரியும்.*

-வள்ளி-

# பதுமைகள் அல்ல

மதக் கோட்பாடுகள் பழைய சம்பிர
தாயங்கள்
பதுமையாக என்னை இத்தனை நாளும்
வீட்டினுள் அடங்கி இருக்க வைத்தன.
அடக்கம் மனதைப் பொறுத்தது.
அது, எனக்குத் தெரிந்திருந்தது.
ஆனால் என்னை ஒடுக்கியவர்களுக்குத்
தெரியவில்லை
என்னைப் போலவே என் அயலவளும்
இருந்தாள்

அன்றொருநாள்,
அராஜக அரசின் ஏவற் பிசாசுகள்
திறந்த வீட்டில் நுழையும் நாய்போல்
அவள் வீட்டுள் புகுந்தார்கள்.
தனிமையாக இருந்தவள்
வெறிநாய்கள் கையில்
குதறுமலா - - - ? அவர்கள் - - - ?
அடக்கப்பட்டே வாழ்ந்தவள் அவள்.
அதனால், துணிவு - ஆம்
அவளிடம் இருக்கவில்லை.
முடிவு - - - சமுகத்தின் பார்வையில்
அவள் கற்பிழந்தவள்.

பெண்களை கொன்ற போது
பதுமைகளாக நாம்,
அவர்களை வதைத்த போதும்
அவ்வாறே தான்.
போராட்டத்தில் வதையும் மரணமும்
தவிர்க்க முடியாதன என்று
அன்று நாம் அப்படி - - - அ
ஆனால்,
அற்ப பொருளாக மதிக்கப்பட்டு
பெண்கள் அலங்கோலப் படுத்தப்பட்ட
ஆரம்பித்த பின்

இனியும் பதுமைகளாகவா - - - ?
எம்மை பெண்களாக
இராணுவம் வதைக்கட்டும், கொல்லட்டும்
மகிழ்ச்சியுடன் எம் மண்ணுக்காக
மரணத்தை தழுவுவோம்.
ஆனால் அற்ப பொருளாக மிதிக்கப்
பட்டபின்
பதுமைகள் பெண்களானோம்.
பண்பாடு தெரிந்து கொண்டோம்.
எமக்காக மட்டுமல்ல, எம் மண்ணின்
மீட்சிக்காகவும்.
இனி எம் போராட்டம் தொடரும்.
அதற்கு முன்
வீட்டில் எமக் கெதிரான அடக்கு
முறையாளருக்கு,
நாம் பதுமையோ, அடிமையோ அல்ல
என்பதை
துணிவுடன் பிரகடனப் படுத்தப்
போகிறோம்.

-மாதவி-

---

**நம்பிக்கை ஒளியை ஏற்றி வைப்பது சுலபம், ஆனால்**
**அதனை அணையவிடாமல் பாதுகாப்பது கஷ்டம்**
**ஆனால் அப்படிப் பாதுகாப்பதில் தான்**
**எந்த ஒருவரினதும் வெற்றியும்**
**வீரமும் தங்கியுள்ளது.**

# சமத்துவம், அபிவிருத்தி, சமாதானம்

மாதர் சமத்துவம் பற்றிய பிரச்சனை எப்போதுமே மனித குலம் எதிர் கொள்ளும் பிரச்சனைகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. ஆனாலும் கடந்த சில தசாப்த காலமாக இப்பிரச்சனை மிக முக்கியத்துவம் பெற்று வருகிறது. ஐ.நா சபை 1975ம் ஆண்டின் சர்வதேச மாதர் ஆண்டாகப் பிரகடனப் படுத்தியது.

மாதர் தொடர்பாக ஏற்கனவே திட்டமிடப்பட்டவற்றின் அமுலாக்கத்துக்கு துணை செய்யும் பொருட்டு ஐ.நா.சபை முதல் தடவையாக ஐ.நா.சபை மாதர்க்கான ஐ.நா.தஸாப்தம் ஒன்றை அனுஷ்டிப்பது பற்றி அறிவித்துள்ளது. இது சமத்துவத்திற்காக போராடும் உலக மனிதர்களின் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டினையும் மேலும் சக்திப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புக்களைத் திறந்து வைக்கும்.

இவ் விஷயம் குறித்து சோவியத் மாதர் கமிட்டியின் தலைமைக்குழு உறுப்பினர் தாத்தயானா நிக்கலயேவா 'நொவஸ்தி' நிருபர் எயலேனா குர்கோவ்ஸ்காயாவின் கேள்விக்கு பதில் அளிக்கிறார்.

**கேள்வி:**

உங்கள் கருத்துப்படி கடந்த தசாப்த காலத்தில் மாதர் உரிமைகள் பற்றிய பிரச்சனையை முன்னணிக்குத் தள்ளிவிட்ட காரணி எது?

**பதில்:**

மாதர்க்கான ஐ.நா தசாப்தம் பிரகடனப் படுத்தப் பட்டதும், மாதர் உரிமைகளை பாதுகாக்கும் விஷயத்தில் சர்வதேச பொது மக்களின் கவனம் ஈர்க்கப்பட்டிருந்ததும் இன்றைய உலகில் மாதர் வகித்து வரும் பாத்திரம் வளர்ந்து வருவதையே காட்டுகிறது. குடும்பக் கடமைகளுடன் தொடர்ந்தும் தம்மை மட்டுப்படுத்திக் கொண்டு வாழ இன்று மாதர் தயாராயில்லை. உற்பத்தித் துறையில் மேலும் மேலும் அதிக அளவில் ஈடுபட்டுவரும் பெண்கள் அரசியல், பொருளாதார, கலாச்சார விவகாரங்களிலும் தீவிர பங்கெடுத்து வருகின்றனர். சமூக முன்னேற்றத்தின் மாபெரும் துணைச் சக்தியாக மாதர் ஆகிவிட்டுள்ளார்கள். இந்த நிகழ்வுப் போக்கினை எவராலும் திசைதிருப்ப முடியாது. ஏனெனில், உலகின் உற்பத்திச் சக்திகளினது வளர்ச்சிப் போக்கினாலேயே இது நிர்ணயிக்கப்படுகிறது.

பொருளாதார பெறுமதி கொண்டவையை உற்பத்தி செய்யும துறையில் 50 கோடிக்கும் அதிகமான மாதர்கள் பங்கெடுக்கின்றனர். வேலை செய்யும் ஆற்றல் மிகுந்த உலக மக்கள் தொகையில் 113 பங்கினர் மாதர்களாகவுள்ளனர். அதே வேளையில் மாதர்க்குச் சம உரிமை வழங்கும் பிரச்சனை உலகில் பல நாடுகளிலும் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சனையாகவே இருந்து வருகின்றது. வேலை செய்வதற்கான உரிமை உத்தரவாதம், செய்யும் வேலைக்கான ஊதியம், கல்வி- தொழில் பயிற்சி பெறுதல், அரசியல் உரிமைகள் முதலான விஷயங்களில் மாதர்க்குத் தொடர்ந்தும் பாகுபாடு காட்டப் பட்டு வருகிறது.

**கேள்வி!**

''சமத்துவம், அபிவிருத்தி, சமாதானம்'' என்ற சுலோக மகுடத்தின் கீழ் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள மாதர்க்கான ஐ.நா தஸாப் தத்தின் பிரதான இலக்குகள் பற்றி விவரிக்க முடியுமா? மேற்படி சுலோகத்தின் கீழ் கொப்பன் ஹேகனில் நடைபெற்ற மகாநாட்டில் நீங்களும் ஒரு பிரதிநிதியாகக் கலந்து கொண்டீர்களல்லவா?

**பதில்:**

ஏக காலத்தில் அணுகக்கூடியதும் முக்கிய

மானதும் இடைத்தொடர்புள்ள துமான மூன்று பிரச்சனைகள் கொப்பன்ஹேகன் மகாநாட்டுச் சுலோக மகுடம் பிரதிபலிக்கிறது. மாதர்களின் நிஜமான சமத்துவம் என்பது உலகின் சமூக பொருளாதார வளர்ச்சிப் போக்கினின்றும் பிரிக்கப்பட முடியாத ஒன்ருகும். புள்ளி விப ரங்களின் பிரகாரம், மூன்ருவது உலகின் கோடிக் கணக்கான மக்கள் பஞ்சத்தால் வாடுகின்றனர். 10 கோடி சிறுவர் உட்பட 46.2 கோடி மக்கள் மந்த போஷணையால் பாதிக்கப்பட்டுள்ளனர். 76கோடி மக்கள் எழுத்தறிவற்றவர்களாக உள் ளனர். 1974 மே மாதம் நடைபெற்ற ஐ.நா பொதுச் சபையின் விஷேச தொடர் கூட்டத் தில் நிறைவேற்றப்பட்ட ஒரு பிரகடனம் வலி யுறுத்துவது போல, ஒரு புதிய பொருளாதார ஒழுங்கினை நிறுவுவதன் மூலமும் உலக சமா தானத்தை நிலை நிறுத்துவதன் மூலமுமே வள ரும் நாடுகளுக்கும் வளர்ச்சி பெற்ற நாடுகளுக் கும் இடையிலான இடைவெளியைக் குறைக் கவும், உயர் விகித பொருளாதார வளர்ச்சியை உத்தரவாதப்படுத்தவும் முடியும். ஒரு அணு யுத்தம் வெடிக்கு பட்சத்தில் மனித குலம் முழுவதுமே அழிந்து போகும். மாதர்க்கான ஐ.நா தஸாப்தம் தொடர்பாக நடைபெற்ற மாதர் மகாநாட்டுக்கு ஐ.நா பொதுச் செயலாளர் வால்ட்டெய்ம் அனுப்பி வைத்த செய்தியில் சமாதானம் இன்றி நிஜமான சமத்துவத்தையோ அல்லது சுதந்திரமான வளர்ச்சியையோ எய் துவது அசாத்தியமானது என வலியுறுத்தி யுள்ளார்.

## கேள்வி:

மாதர்க்கான ஐ.நா தஸாப்தத்தின் முதல் ஐந்தாண்டு காலத்தில் சாதிக்கப்பட் டவை என்ன?

## பதில்:

கடந்த ஐந்தாண்டு காலத்தில் அபிவிருத் தித் துறைகளில் மாதர்களை ஈர்த்தெடுப்பதற் கெனப் பல நாடுகளில் பல நிர்வாக ஒழுங்கு களும், நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன. மாதர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக் குடன் சட்டங்கள் இயற்றப்பட்டன. சில நாடு கள் ஆண்களுடனை மாதர் சமத்துவத்தை உத்தரவாதப்படுத்துவதற்கான சட்டவழிபட் டதும், அரசியல் யாப்பு வழிபட்டதுமான பல திருத்தங்களை மேற்கொண்டன.

ஆனுலும், கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஏற் பட்ட முக்கிய பெறுபேறு என்னவெனில், தமது சமத்துவ உரிமைகளுக்கான போராட்டமானது முன்னேற்றத்துக்கும், சமூக நீதிக்கும், சமாதா னத்துக்குமான போராட்டத்திலிருந்து பிரிக் கப்பட முடியாத ஒன்று என்ற உண்மையை அனைத்துக் கண்டங்களையும் சார்ந்த மாதர்கள் மேலும் மேலும் உணர்ந்துகொள்ளத் தலைப்பட் டமைதான்.

இதனுல் தான் 1980 ஜுலை 14ம் திகதி முதல் 30 வரை கொப்பன் ஹெகனில் நடை பெற்ற மாதர்ககான ஐ.நா தஸாப்தம் தொடர் பான மகாநாடு இணக்கவமைதிப் போக்கினை முன்னெடுத்துச் செல்வதற்கும், ஆயுதப் போட் டியை நிறுத்துவதற்குமான பிரயத்தனங்களை தீவிரப்படுத்துமாறு அனைத்துலக மாதர்களை உழைக்கும் மக்களையும் அறைகூவி அழைத்தது. இம்மகாநாட்டில் 145 நாடுகளைச் சார்ந்த தூதுக் குழுக்கள் கலந்து கொண்டது.

## கேள்வி;

சோவியத் யூனியனில் ஐ.நா தஸாப்தத் தின் முதல் ஐந்தாண்டுகள் பத்தாவது ஐந் தாண்டு அபிவிருத்தி அமுலாக்க ஆண்டுகளு டன் ஒரு காலத்தில் இணைந்ததாக அமைந் தது. இக்காலகட்டத்தில் சோவியத் மாதர்க ளுக்கென அழைக்கப்பட்டுள்ளவை என்ன? இன் னும் ஆற்றப்பட வேண்டியவை எவை?

## பதில்:

ஆண் - பெண் சமத்துவமானது ஜனநாய கத்தின் ஓர் அடிப்படைக் கோட்பாடு என்ற அளவில் மட்டுமன்றி, இது சமுதாயம் முழுமை யினதும் மாதரினதும் பன்முக வளர்ச்சிக்கான அடிப்படையிலேயே சோவியத் ராஜ்யம் தனது வடிவமைக்கிறது. இதற்கு எமதுநாட்டினதும் இதர சோஷலிஸ நாடுகளினதும் வரலாற்று வழிபட்ட அனுபவம் நல்ல சான்ருக உள்ளது. உற்பத்திச் சாதனங்களினது தனியுடமையினை யும் மனிதனை மனிதன் சுரண்டும் முறையினை யும் இல்லாதொழித்த சோவியத் அரசானது. அதன் ஆரம்பகாலம் முதற்கொண்டே மாதரின் நிஜமான சமத்துவத்துக்கு அத்தியா வசியமான முன்நிலைமைகளை உருவாக்கும் பொறுப்பினை நிறைவேற்றி வருகிறது. சோவி யத் அரசியல் சட்டத்தில் மாதர்களின் உரிமை கள் தெட்டத்தெளிவாக வரையறுக்கப்பட்டுள் ளன. இந்த உரிமைகளுக்கு நம்பகமான சமூக பொருளாதார சட்ட, உத்தரவாதங்கள் இருக் கின்றன.

சமுதாயத்தின் அரசியல், பொருளாதார, கலாச்சார வாழ்வின் பல்துறைகளிலும் பங்கெடுப்பதற்குச் சோவியத் மாதர்களுக்கு எவ்வாய்ப்புக்கள் உள்ளன என்பதற்கு சான்ருக நான் சில உதாரணங்களைக் குறிப்பிடுகிறேன். எமது நாட்டில், 140 லட்சத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் [பள்ளி செல்லும் வயதெல்லைக்குக் குறைந்த வயதுடையோர்] விசேஷ பாலர் கல்வி நிலையங்களுக்குச் செல்கிருர்கள். இத்தகைய கல்வி நிலையங்களில் சிறுவர்களைப் பராமரிப்பதற்கான செலவில் 80வீதத்தை அரசே பொறுப்பேற்கிறது.

நாட்டின் சுகாதாரத் தேவைகள் யாவும் இலவசமாக வழங்கப்படுகின்ற அதே வேளையில் 16 ஆய்வு நிலையங்கள் மாதர்களினதும் சிறுவர்களினதும் சுகாதார பாதுகாப்புத் தொடர்பான விஞ்ஞான வழிபட்ட பிரச்சனைகளை அணுகி ஆராய்ந்து வருகின்றுன்.

சோவியத் தொழிலாளர்களில் 51 சத வீதமானோர் மாதர்களாக உள்ளனர். 1979 ல் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பு புள்ளி விபரங்களின் பிரகாரம் வேலை செய்யும் ஆயிரம் பெண் தொழிலாளர்களில் 801 பேர் உயர்தர அல்லது நடுநிலை கல்வித் தகைமை பெற்றவர்களாயிருக்கின்றனர். கல்லூரி மாணவர்களில் 51 சதவீதமானோர் பெண்களாகஉள்ளனர்.

சோவியத்யூனியனில் கல்வியானது எல்லா மட்டங்களிலும் இலவசமாகவே வழங்கப்படுகிறது. பெண் பட்டதாரி நிபுணர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தளவில் சோவியத் யூனியனே உலகில் முதலிடம் பெறுகிறது. விசேட நடுநிலைக் கல்வி நிலையங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகளில் ஏறத்தாழ 59 சத வீதத்தினர் பெண்களாக இருக்கின்றனர்.

சோவியத் சட்டங்கள் வேலைசெய்யும் மாதர்களின் பாதுகாப்புக்கான விசேஷ ஏற்பாடுகளை உத்தரவாதப் படுத்துகின்றன. கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலானோரை வேலைக்கமர்த்துவதோ அவர்களின் ஊதியங்கள் குறைக்கப்படுவதோ அல்லது அவர்களை வேலையிலிருந்து நீக்குவதோ சோவியத் யூனியனில் அனுமதிக்கப்படுவதில்லை

நாளாந்த வாழ்வில் மரபுரீதியாக நிலவிவந்த பெண்களைப் பொறுத்த சமத்துவமின்மையைப் பூண்டோடு இல்லாதொழிக்க இன்னும் செய்யவேண்டியன எவ்வளவோ உள்ளன 11வது ஐந்தாண்டுத்திட்டத்தின் சமூக வேலைத்திட்டமானது பெண்களின் தொழில் நிலைமைகளையும் வாழ்க்கை நிலைமைகளையும் மேம்படுத்துவதற்கு தாய் சேய் பராமரிப்புக்குமான மேலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்குவகை செய்கிறது.

## சோவியத் மாதர் கமிட்டித் தலைமைக் குழு உறுப்பினர் பட்டியாரு நிலக்கலயேவா

*பெண்களுக்கு சம்பிரதாயமான சமத்துவத்துக்காகப் போராடாமல் பொருளாதார மற்றும் சமூகரீதியான சமத்துவத்துக்காகப் போராடுவது உழைக்கும் பெண்கள் இயக்கத்தின் முக்கியமான கடமையாகும். பெண்களைக் 'குடும்ப அடிமைத்தனத்தி'லிருந்து விடுவித்து, உணவு சமைப்பது, குழந்தைகளை வளர்ப்பது என்ற வகையில் நெடுங்காலமாக இருந்து வரும் அலுப்புத்தருகிற வேலைகளுக்கு அவமானகரமான முறையில், உணர்ச்சிகள் மழுங்கிப் போகும் விதத்தில் அடிமையாக இருப்பதிலிருந்து விடுதலை செய்து சமூகரீதியில் பயனுள்ள உழைப்பில் அவர்கள் பங்கு கொள்ளுமாறு செய்வதே முக்கியம்*

— லெனின் ---

# பதுங்கியது போதும்

*பவித்திரா*

பெண்குலமே தோள் கொடு விரைவில் ஓர் விடிவிற்காய்
பேதையாய் நீயிருந்து வீணடித்த காலம் போதும்.
சமுதாயம் சம்பிரதாயம், மானம் மரியாதை
சரிகின்ற இனத்தில் நீ இவற்றைப்பார்த்து என்ன கண்டாய்?
கண்முன்னே கணவனையும் பாசம் மிக்க குழந்தையையும்
கண்ணான அண்ணனையும் கருத்தில் வைத்த தம்பியையும்
துடிதுடிக்கப் பறி கொடுத்து துயரத்தில் தோய்ந்து போனாய்.
ஆண்களின் உயிரை மட்டும் பறித்து விட்டுப் போனானா கயவன்
ஆசையுடன் நீ வளர்த்த மகளையும் ஏன் உன்னையுமே கதற வைத்தான்.

மானம் இழந்து கற்பிழந்து எல்லாமே பறிபோயும்
மனமெல்லாம் வெம்பி வெடிக்க மடிகின்றாய் வீணாக.
இன்னும் ஏன் உன்னிடத்தில் எதிர்க்கும் வீரம் வரவில்லை.
இழந்து விட்ட மானத்துக்கு கண்ணீரால் தீர்வுண்டோ
உன் மனத்தாழ்வினால் வீணாகிப் போகின்றாய்.

கைகேயி அன்று தன் விரல்களினால் அச்சாணி கொடுத்து
கதியற்று நின்ற பதியை வென்றிடவே வழி செய்தாள்.
கதையாய் கேட்டபோது அவள் அல்லவா பெண் என்பாய்
அதையே நீ செய் என்றால் ஐயோ! நானா? என்று ஓடுகின்றாய்.
நீயே போராட முன் வந்தால் நினைத்துப் பார்
ஆண்டு சென்று மலரும் தமிழீழம் இக்கணமே மலராதோ?
ஊமையாய் வேடம் போட்டு உன்னையே நீ ஏய்க்கின்றாய்
பழைய தமிழ்ப் பெண்கள் கூட போரிட்டார் தெரியாதோ?
பாவியாய் நீயிருந்து ஒன்றுக்கும் உதவாமல் வாழ்வாயே.
மனதிலே துணிவு கொள். மானத்துடன் வாழ போராடு
மக்களுக்காய் உன் வாழ்வை அர்ப்பணம் செய்.
வீண்கதை பேசி வீணாக்கும் நேரத்தை
ஆக்கத்திற்காய் செலவு செய்.
வேகமுடன் முன்னேறு துணிவுக்கு இடம் கொடு,
வெற்றி என்றும் நிச்சயம்.

---

**விடுதலை,**

**கிடைப்பது நிச்சயம் என்பது அல்ல,**
**கிடைக்க வேண்டும் என்பது நிச்சயம்.**

# முதலுதவி

இன்று அநேகமாக எங்கள் காதுகளில் விழுவதும், கண்களால் பார்ப்பதும் மின்சாரம் தாக்கி மரணமடைபவர்களைப் பற்றிய விஷயங்களே. அவ்வாறான மரணத்தைக் கூடுமானவரை தவிர்க்க முயல இங்கே சில விளக்கங்களைத் தருகிறோம்.

மின்சாரத்தால் ஏற்படும் அபாயம் மிக விரைவாகவும், புத்திசாலித்தனமாகவும் உதவி புரிவதனாலேயே நீக்கப்படக்கூடியது. உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால் விரைந்து செயற்பட வேண்டும் உடனடி நடவடிக்கைகள் இவ்வாறு அமைய வேண்டும்.

(1) மின்சாரவிசையை (SWITCH) உடனே கண்டுபிடித்து நிறுத்த முடியாவிட்டால் கட்டையை(PLUG) எடுத்து விட வேண்டும். அதுவும் இயலாவிட்டால் மின்சாரம் வரும் கம்பியை உடைத்து அல்லது முறித்து மின்சார ஓட்டத்தை நிறுத்த வேண்டும். கத்தி, கத்தரிக்கோல், பாக்குவெட்டி எதனையும் பாவிக்கக் கூடாது. மரப்பிடி போட்ட கருவிகள் எதனையும் பயன்படுத்தலாம். எந்த உலோகத்திலான கருவிகளையும் பயன்படுத்தக் கூடாது.

(2) மேற்கூறப்பட்டதை உடனே செய்ய முடியாவிட்டால் ஈரமில்லாததும், மின்சாரத்திலிருந்து காப்பாற்றப்பட்டதுமான கருவிகளை உபயோகித்து மின்சார ஓட்டத்திலிருந்து நோயாளியை விடுவிக்க வேண்டும். ஈரமற்ற ஆடைகள், மடித்த காகிதம் போன்றவை பாதுகாப்புக் கொடுக்கும். உதவி செய்பவர் கூடுமானவரை ரப்பர் செருப்புகளை அணிய வேண்டும். அல்லது அடுக்காயுள்ள கடதாசிகள் மேல் நிற்க வேண்டும்.

தலைக்கு மேல் ஓடும் மின்சாரக் கம்பிகளில் மிகவும் அதிக சக்தி இருந்தால் நோயாளி கம்பியைத் தொடாமல் இருந்தாலும் ஆபத்து நேரிடலாம். ஏனெனில் இடைவழியே மின்சாரம் பாயக் கூடும். அதனால் மின்சாரம் சம்பந்தப்பட்ட பொருட்களினருகே போகாமல் ஒரு ஈரமற்றதடி, ஈரமற்ற பலகை அல்லது ஈரமற்ற கயிற்றைக் கொண்டு நோயாளியை இழுத்து அப்புறப்படுத்தலாம்.

(3) நோயாளி சாதாரணமாய் மூச்சு விடாவிட்டால் செயற்கைச் சுவாசம் செய்ய வேண்டும்.

(4) விரைந்து மருத்துவரை நாடவேண்டும்.

## செயற்கை சுவாச முறை

நோயாளியை முகம் குப்புறப படுக்க வைக்க வேண்டும். அவனின் கைகளை ஒன்றின் மேல் ஒன்று வைத்து அவன் நெற்றியின் கீழ் வைக்க வேண்டும். தலை சற்று ஒரு புறமாய் திரும்பியிருக்க வேண்டும். மூக்குக்கும் வாய்க்கும் தடை இருக்கக் கூடாது. உதவி செய்பவர் நோயாளியின் தலைப்பக்கம் பார்த்து அவனுடைய இடுப்புக்குச் சற்றுக் கீழே இரண்டு கால்களையும் மடக்கி முழங்காலில் இருக்க வேண்டும் முதுகெலும்பின் இருபக்கத்திலும் கைகளுடைய இரண்டு முட்டிகளும் ஒன்றையொன்று தொடத்தக்கதாயும் கஷ்டமின்றிப் பெருவிரல்களை முன்னுக்கு நீட்டி விரல்களைச் சேர்த்து இடுப்புக்கருகே வைத்து விரல்களின் நுனிகள் தரையை நோக்கத் தக்கதாக இடுப்பின் வளைவின் மேல் வளைத்துப் பிடிக்க வேண்டும்.

உதவி செய்பவர் நோயாளியின் இடுப்பின் மேல் தன் தேகத்தின் பாரம் அழுத்தத் தக்கதாய் தன் முழங்கைகளை வளைக்காமல் தொடைகள் நேரான நிலையில் வரத்தக்கதாக முழங்கால்களை நிமிர்த்தியும் முன்னுக்குப் போக வேண்டும் இப்படிச் செய்வதால் வயிற்றிலுள்ள உறுப்புக்கள் தரையோடு அழுத்தப்பட்டு நுரையீரல் வழியாக காற்று வெளியேற்றப்படுகிறது. அதாவது சுவாசம் நடக்கிறது.

# செர்கி சிமிர்நோவின் 'வீரரின் கல்லறை மர்மம்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

ஜெனேவாவில் இருந்த எனது நண்பர்கள் என்னிடம் கூறிய அந்நாளைய நிகழ்ச்சி ஒன்றை என்னால் மறக்க முடியாது. லிக்குரியா மலைப் பகுதி விவசாயிகள் அந்த நிகழ்ச்சியை இன்னமும் நினைவு கொள்கிறார்கள் என்றார்கள். அது நமது நாட்டு மக்களின் கட்டுப்பாட்டிற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகிறது. சோவியத் குடிமகன் என்ற பெருமைக்கு எந்த விதக் கேடும் நேராத வாறு நடந்து கொண்ட உறுதிப்பாடாகும்.

லிக்குரியன் கட்சி அணியினரோடு நூற்றுக் கணக்கான சோவியத்வீரர்கள் சண்டையிட்ட போதே இது நடந்தது அவர்களில் ஒருவர் கிராமத்தில் 'விடுப்பில்' (LEAVE) இருந்தார். அவர் அதிகமாகக் குடித்திருந்தார். குடிவெறியில் வெட்கப்படத்தக்க வகையில் சூறையாடி விட்டார். இந்த மனிதரது நடத்தை தவறு தான் என்றாலும் போரின் போது மிகச்சிறந்த பணியாற்றினார். ஆனால் இந்தக் குற்றம் எல்லாக் கட்சிக்காரர்கள் மீதும் நிழலாய்ப் படிந்தது, தண்டிக்காமல் விட முடியவில்லை. போர்க் காலச் சட்டங்களின்படி அவரை விசாரிப்பது என்று முடிவானது. அந்த விசாரணைக்குழுவில் ஆறுஇத்தாலியர்களும், ஆறுசோவியத் கட்சி உறுப்பினர்களும் முறைப்படி நியமிக்கப்பட்டார்கள்.

விசாரணை அனைத்துப்படையினர் முன்னிலையில் நடைபெற்றது. குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது தோழர்கள் முன்னிலையில் தலையைத்தொங்கவிட்டபடி நின்றார். அவரால் அவர்களைப்பார்ப்பதற்கும் துணிச்சல் இல்லை. இத்தாலிய ஜூரிகள் முதலில் பேசினார்கள். இவரது குற்றத்தைக் கடுமையாக விமர்சித்து, கடுமையான தண்டனை கொடுக்க வேண்டுமென்று கூறினர். அவர்களில் ஒருவர், இவரை இராணுவ அணியில் இருந்தே வெளியேற்றவேண்டும் என்றார். இன்னொருவரோ, இவரைநீண்ட காலத்திற்குச் சிறையில் வைக்க வேண்டுமென்றார். இறுதியாக சோவியத் ஜூரிகளில் ஒருவர் எழுந்து நின்றார். தனது நாட்டுக்காரருக்காக அவர் மன்னிப்புக் கோருவார் என்றே எல்லோரும் நினைத்தார்கள் ஆனால் அவரோ எதிர்பார்க்காத ஒன்றைச் சொன்னார்.

பல ஆண்டுகளாக இத்தாலிய பாசிஸ்டுகள் சோவியத் மக்களைப் பற்றியும் சோவியத் அரசைப் பற்றியும் அவதூறாகப் பிரச்சாரம் செய்து வந்திருப்பதை அவர் நினைவுபடுத்தினார். 'இப்போது', அவர் சொன்னார். "நாம் போரில் தோழர்களாக மாறி இருக்கிறோம்.

நீங்களாகவே பார்த்துக் கொள்ள நிறைய சந்தர்ப்பங்கள் உங்களுக்கு வாய்த்திருக்கிறது. உங்களிடம் அவர்கள் எங்களைப் பற்றி எவ்வளவு கேவலமாகப் பொய் பேசி வந்திருக்கிறார்கள் என்பது தெரியும், இந்த நேரத்திலிருந்து நாம் நண்பர்களாகி விட்டோம். நீங்கள் எங்களை நேர்மையானவர்கள் உண்மைத்தோழர்கள், துணிவுள்ள வீரர்கள் என்பதை அறிந்து கொண்டிருக்கிறீர்கள். இந்நிலையில் எங்களில் ஒருவர் வெட்கப்படத்தக்க குற்றத்தைச் செய்திருக்கிறார் அவர் சோவியத் குடிமகனின் பெருமைக்கு கேடு தேடித்தந்துள்ளார். கட்சிக்காரரின் பெருமையைக் கெடுத்து விட்டார். அவரது குற்றம் மிகவும் கொடுமை ஏனெனில், அவர் அதை அந்நிய மண்ணில் செய்திருக்கிறார் போர்ச்சட்டப்படி, நியாயமாக அவருக்கு எந்தவிதக் கருணையும் காட்டுவதற்கில்லை."

அவரது தோழர்கள் சார்பில் மரணதண்டனை விதிக்கும்படி கேட்டுக் கொண்டார். சில இத்தாலியர்கள் இவர்களோடு விவாதிக்கத்தொடங்கி, அந்தத்தண்டனை மிகவும் பெரியது என்று கூறிய போதிலும், ரஷ்யஜூரிகள் தங்கள் நிலையில் மாறாது கண்டிப்பாக இருந்து விட்டார்கள்.

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு கடைசியாகப் பேசவாய்ப்பு அளிக்கப்பட்டபோது, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அவர் ஏதும் செய்யவில்லை.

தனது விபரீதமான குற்றத்தைத் தான் உணர்வதாகக் கூறினுர். தீர்ப்பு எத்தகையதாக இருந்தாலும், தண்டனையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறினுர்.

அவருக்கு மரணதண்டனை அளித்து குழு தீர்ப்பளித்தது ஓர் இத்தாலியர் கருணை காட்ட வாக்களித்தார். இன்னெருவர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. பிற ஜூரிகள் அனைவரும், அதில் மிகமுக்கியமானது, ஆறுசோவியத் பிரதிநிதிகளும் மரணதண்டனை அளிக்கும்படி வாக்களித்தார்கள்.

காலை உதயத்தின்போது நான்கு இத்தாலியர்களாலும், நான்கு சோவியத்கட்சி உறுப்பினர்களாலும் தண்டனை நிறை வேற்றப்பட்டது. தண்டனைவிதிக்கப்பட்டவர் தனது மரணத்தைப் பெருமையோடு ஏற்றுக்கொண்டார். அவரது தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் தன் தோழர் ஒருவரிடம் தனது குடும்பத்தினர் முகவரியைக் கொடுத்தார்.

''தயவுசெய்து நான் போரின்போது இறந்ததாக எழுதுங்கள்'' ரஷ்யாவிலுள்ள தன் சக மக்களிடம் அவர் வேண்டிக்கொண்டார். ''கடைசியாக உங்களிடம் ஒன்று வேண்டிக்கொள்வேன்என்னை நோக்கிச் சுடவேண்டாம். வானத்தைப்பார்த்துச் சுடுங்கள் உங்களது சொந்தத் தோழர்களது கைகளாலேயே சாவது மிகவும் பயங்கரமான ஒன்றுதான், நான்கு அல்லது எட்டுத்தோட்டாக்கள் என்னைக் கொன்றுவிடும். உங்களிடம் இவ்வாறு நடந்துகொண்டமைக்காக உங்களால் மன்னிக்க முடிந்தால் மன்னியுங்கள்.

அவரது வேண்டுகோள் முறையாக நிறைவேற்றப்பட்டது. தனது ருஷ்யத் தோழர்கள் வானத்தைப் பார்த்துச் சுட்டதற்காக எந்த இத்தாலியரும் கடிந்துரைக்கவில்லை

எனது கருத்துப்படி இந்த மனிதரது குடும்பம் அவரது இந்த முடிவுக்காக வெட்கப்பட வேண்டியதில்லை. அவர் மிகப்பெரிய குற்றத்தைச் செய்தார். ஆனுல் தனது துணிவான பெருமைப்படத்தக்க மரணத்தால் அதைமாற்றிவிட்டார்.

## செர்கி சிமிர் நோவ் பற்றி-

லெனின்கிராடில் ஒரு பொறியியல் வல்லுனரின் மகனுக 1915ஆம் ஆண்டில் பிறந்து தன் பணிவாழ்வை 1931இல் கார்கோவ பொறியயில் தொழிற்சாலையில் தொடர்ந்தார். தேசபக்தப் போரின் போது அவர் முதலில் ஓர் போர் அதிகாரியாக இருந்து பின்னர் ஓர் இராணுவச் செய்தித்தாளின் விசேட நிருபரானுர். அவருக்குப் பல விருதுகளும் பதக்கங்களும் வழங்கப்பட்டன. அவரது நூல்களில் புடாபெஸ்ட் போர்களில், தைபரின், ஹங்கேரி, மற்றும் ஸடாலின கிராடு நிலங்களில் போன்றவை போர்க்கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

'எழுக ஓ, வலிமை மிகு நாடே'

சந்தவை

---

**தன் குற்றத்தை குற்றமென ஒப்புக்கொள்பவன்**
**முழு மனிதன் என்ருல்:- அதற்கான**
**தண்டனையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்பவன்**
**தேவனுக மதிக்கப்பட வேண்டியவன்.**

# எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்?

தொலைக்காட்சியில் தோன்றியும் வானொலி மூலமாகவும் தொண்டமான் தோட்டத் தொழிலாளிகள் தொழிற்சாலைக்குச் செல்லவேண்டும், அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றும் 40 வருடங்களாக தாம் நடத்திய சாத்வீகப் போராட்டத்தால், காந்தீய வழியால் அமைதியாக நமது உரிமையைப் பெற்றிருப்பதாகவும் தாம் எல்லோரும் இப்போது இந்த நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் அன்பாக வணக்கமாகக் கூறிக்கொண்டார்.

ஆனால் மலையக மக்களைச் சாட்டாக வைத்துக் கொண்டு இந்தியா இலங்கைப் பிரச்சனையுள் தலையிட்டுக் கொண்டிருக்கும் என்பதால் மலையக மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பது நல்லதென்றே அவர்களுக்கு பிரஜா உரிமை வழங்கப்பட்டது என்கிறார் பிரேமதாசா. அத்துலத் முதலியோ தாம் இவ்வாறு செய்தால் மலையக மக்களையும் இணைத்துக் கொள்ள நினைத்த பயங்கரவாதிகள் ஏமாற்றமடைந்ததாகவும் ஈரோஸ் இயக்கமும் ஏனைய மற்றைய பயங்கரவாதிகளும் ஏமாற்றமடைந்து விட்டதாகவும் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களோ குடியுரிமை வழங்கியது தவறு என்றும் தாம் பதவிக்கு வரும்பொழுது நிச்சயமாக தோட்டத் தொழிலாளருக்கு குடியுரிமை வழங்கும் சட்டமூலத்தை ரத்துச் செய்வோம் என்றும் சூளுரைத்தனர். ஸ்ரீலங்கா அரசு கூட இவர்களை இந்தியப் பிரஜா உரிமை பெற்று இந்தியாவிற்குக் குடிபெயரட்டும் என்றே இதுவரை காலமும் பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் இந்தியா அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை, மாறாக மலையக மக்கள் போராடத் தயாராகிவிட்ட சூழ்நிலையே உருவாகி வருகிறது வடக்கு, கிழக்கு தீவிரவாதம் இங்கேயும் பரவி இவர்களும் தீவிரவாத போராட்ட சக்திகளாக மாறலாம் என்ற அச்சமும், மலையக மக்களின் பிரச்சனை தீர்க்கப்படாதிருந்தால் இந்தியாவின் தலையீடு இருக்கும் என்ற பயமும் மலையக மக்களின் பிரச்சனைக்கு ஓர் முடிவு காணவேண்டிய அவசியத்தை ஜனாதிபதிக்கு ஏற்படுத்தியது.

சுதந்திர வேட்கை, மக்கள் எழுச்சியைப் பற்றி புரிந்துணர்வில்லாத ஸ்ரீலங்கா அரசாங்கம் குடியுரிமை வழங்கியதோடு பிரச்சனை தீர்ந்தது என்று நினைத்தது, ஆனால் இனிமேல் தங்கள் போராட்டம் தொடரும் என்பதை அரசுக்கு மலையக மக்கள் உணர்த்தி வருகிறார்கள் என்பதை தற்போது அங்கு நடக்கும் நிகழ்வுகள் தெரிவிக்கின்றன. ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்குமுறைக்கெதிராக மலையகமக்கள் கிளர்ந்தெழுந்து விட்டார்கள். தம்மைக் குரூரமாகத் தாக்கும் இனவெறியர்களை இனியும் எதிர்த்துத் தாக்காமல் தம்மால் இருக்கமுடியாது என்பதை உணர்த்தும் வகையில்தான் காமினி திஸநாயக்காவின் சிங்களக் குடியேற்றத்திட்ட மக்களை அவர்கள் அடித்துத் துரத்தியுள்ளார்கள். மேலும் இராணுவத்தை எதிர்க்கும் மனோபலம் அவர்களிடம் இருக்கின்றதென்பதை அங்கு நடந்த ஓர் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. இராணுவத்தினர் ஓர் இளைஞனைக் கிளர்ச்சிக்காரனென்று குற்றம் சாட்டி கைது செய்து வாகனத்தில் கொண்டு செல்ல முனைந்த போது மக்கள் எல்லோரும் ஒன்றாக வாகனத்தைச் சுற்றி வளைத்து அந்த இளைஞனை விடுவித்தனர்.

ஸ்ரீலங்கா இனவாத அரசினால் மிகக்கொடூரமாக வதைக்கப்பட்டு சுரண்டப்படுபவர்கள் மலையக மக்கள்தான். இவர்கள் தமது நிலையை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டார்கள். போராடாமல் தமது உரிமைகளைப் பெறமுடியாது என்று புறப்பட்டு விட்டார்கள். நிச்சயமாக தங்கள் மீதான ஸ்ரீலங்கா முதலாளித்துவக் கும்பலின் அதிகாரத்தைத் தகர்த்தெறிந்து பாட்டாளி வர்க்கத் தலைமையை மக்களதிகாரத்தை நிலைநாட்டுவார்கள்.

'ஜந்து' பத்திரிகைக்கு அமைச்சர் தொண்டமான் அளித்த பேட்டியின்போது இலங்கையின் நிலைப்பாடு குறித்து தனது கருத்தை பின்வருமாறு கூறியுள்ளார். "இ.தொ.கா.வோ அல்லது நானோ எதனையும் கூறும்போது நாங்கள் எமது மக்களின் உள்ளக் கிடக்கையையே பிரதிபலிக்கிறோம். என்றால் துணிவுடன் கூறமுடியும் கூறியது போல் உறுதி

யாக நிற்கமுடியும். கேட்டதைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். ஆனுல் இலங்கைத் தமிழர் விஷயத்தில் யார் தீர்மானிப்பது? தமிழர் விடுதலைக் கூட்டணியா? இளைஞர்களா? மக்களா? இந்திய அரசாங்கமா? இப்படியாகப் பல தரப்பினர் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. இது யாருக்காக? யாரைத் திருப்திப் படுத்துவதற்காக? துரதிஷ்டவசமாக தமிழர்களின் அரசியல் தலைமையின் பிடி தளர்ந்து விட்டது. இளைஞர்கள் வன்செயலில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். ஆதலால் அவர்கள் எந்த இணக்கத்திற்கும் வரமுடியவில்லை.

இவ்வாறு மலையகமக்களின் அபிலாசையைப் பிரதிபலிப்பதாகத் தம்மைக் கூறிக்கொள்ளும் அமைச்சர் தொண்டமான் மலையகத் தொழிலாளரை அமைதியாக இருக்கும்படியும், வன்முறையில் ஈடுபடவேண்டாம் என்றும் ஒழுங்காக வேலைக்குச் செல்லும்படியும் கேட்டிருந்தபோதும் மக்கள் தமது நடவடிக்கைகளைக் கைவிடவில்லை. தொண்டமானின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. மலையக மக்களின் நிலையை தன்னுல் நிர்ணயிக்க முடியும் என்ற இறுமாப்பு இப்போதாவது தொண்டமானை விட்டு அகன்றிருக்கும்.

தமிழீழத்து மக்களோ விடுதலை இயக்கங்கள் தமக்கு ஆயுதம் பழக்க வேண்டும், தர வேண்டும் என்று சொல்லியபடி போராட்டத்திற்கான தமது பங்களிப்பை வழங்குவதில் பின் நிற்கிருர்கள். ஆனுல் மலையக மக்கள் தம்மை எதிர்த்தவர்களை எந்த ஆயுதங்களை கொண்டுசென்று தாக்கினுர்கள்? எந்த தைரியத்தில் இராணுவத்தினரை சுற்றி வளைத்தார்கள்? அவர்களிடம் இருந்த மனுேபலமும், தம் மீது நடத்தப்பட்டு வரும் ஒடுக்கு முறைக்கெதிராகப் போராடவேண்டியது காமே என்றும் அப்போராட்டத்தில் கிடைக்கும் விடுதலைதான் தம் துயரவாழ்விற்கு விடிவைக் கொடுக்கும் என்றும் திடமாக எடுக்கப்பட்டுவிட்ட தீர்மானமும், அதற்காக தாம் இறக்கவும் தயார் என்ற நிலைப்பாட்டுக்கு வந்துவிட்ட உறுதியும் தான் அவர்களின் ஆயுதங்கள். சிறீலங்கா அரசால் பல்லாண்டுகளாக கொடுமையாக அடக்கி ஒடுக்கப்பட்டு வருபவர்கள் மலையக மக்களே.

இனியும் சிறீலங்கா இனவெறி அரசாங்கத்தின் பக்கம் நின்று அவர்களின் மனம் குளிரவும் பேசி தமக்குச் சார்பாக நிற்பதுபோல் தங்கள் நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டும் தம்மை ஏமாற்றிவந்த தமிழ் அமைச்சரினதோ அவரைச் சார்ந்தவர்களினதோ ஏமாற்று வார்த்தைகளைக் கேட்டு ஏமாற இனியும் தாம் தயாரில்லை என்பதை உணர்த்தப் புறப்பட்டுவிட்டனர் மலையகத்தமிழர். தம் கைதான் தமக்கு உதவி என்பதை அவர்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள். தமது ஒற்றுமையினுலும், மனுேபலத்தினுலும், ஏமாருத தன்மையினுலும் தான் தமது இனத்திற்கு விடுதலை கிடைக்கும் என்று எண்ணத்தொடங்கிவிட்ட மலையகத் தமிழர்கள் இந்தப் 'பிரஜாவுரிமை' வழங்குதலைப் பெரிதாகக் கருதாமல் தமது போராட்டத்தை தொடரத்தான் போகிருர்கள். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் ஆதரவும் சேரும்போது மலையகத் தமிழரின் போராட்டம் மேலும் முன்னெடுக்கப்படும். மக்கள் சக்தி மாபெரும் சக்திதான் என்பதை சிறீலங்கா அரசு விரைவில் புரிந்து கொள்ளும்.

# இலங்கையின் இன்றைய கால கட்டத்தில் தமிழ் மாணவரின் கல்வி நிலை.....

-ராதை-

தமிழரின் பாரம்பரிய பிரதேசங்கள் பறிபோய் உயிருக்கும், உடமைக்கும் உத்தரவாத மற்ற நிலையில் தமிழரின் கல்வி நிலையையும் மழுங்கடிக்கக் கூடியதான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களின் உயிரும். பொருட்களும், மானமும் பறிபோய்க் கொண்டிருந்த காலத்திற் கூட பொறுத்திருந்த தமிழினம் கல்வியில் கை வைக்கத் தொடங்கியதும் தான் கொதித்தெழுந்தது எனலாம். இன்றைய போராட்டம் இவ்வளவு தீவிரமாக கூர்மையடையத்தொடங்கியதற்கு மூலகாரணமே கல்வியில் ஏற்பட்ட தரப்படுத்தல் தான். பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரை இந்த இனவாதம் வேரூன்றியுள்ளது. தமிழீழத்திற்கு அப்பால் உள்ள சிங்களப் பிரதேசத்தில் பாடசாலைக் கட்டிடங்களே எங்கள் இடத்திலுள்ள பல்கலைக்கழகக் கட்டிடம் போலுள்ளது. வெளிநாட்டு பொருளுதவிகளையோ, அன்பளிப்புக்களையோ இந்நாட்டு அரசாங்கம் தமிழ் மாணவர்களின் கல்விக்கு பயன்படும் வகையில் பெரும்பாலும் பயன்படுத்தியதே இல்லை. மொத்தத்தில் கல்விக்கான உபகரணங்களோ, இட, கட்டிட வசதிகளோ, அன்றி புத்தகங்களோ இன்றித் தான் எம் மாணவர்களிற் பலர் கல்வி பயில்கின்றனர். இது நிற்க ஆசியப் பிராந்தியத்திலேயே சிறந்த ஒன்ருக இருந்த யாழ் நூலகமும் திட்டமிட்டு அழிக்கப் பட்டு விட்டது. கல்வியில் எந்தத் துறையில் தமிழன் முதலிடம் பெறவில்லை? இலங்கையின் முன்னைய கைத்தொழில் மந்திரியான சிறில்மத்தியூவே இதனை ஒருமுறை பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்

''வர்த்தகம் முழுவதும் சிங்களவர் அல்லாதோரின் கைகளிலேயே உள்ளது நான் கேட்கிறேன், இதற்கு நாம் தரும் பதில் என்ன? நாட்டில் பெரும்பான்மையினர் சிங்களவர் என்கிறோம். நூற்றுக்கு 74 வீதமும் சிங்கள மக்களாம். ஆனால் புறக்கோட்டைக்குப் போனால் சிங்களம் பேசும் ஒரு ஆளைக் கண்டுபிடிப்பது கடினம். அவ்வாறே மொத்த வியாபாரமும் சிங்களவர் அல்லாதோரின் கைகளிலேயே உள்ளது. இன்னும் ஒரு பிரச்சனை உண்டு. ஏன் இந்த சிங்கள மக்களுக்கு வர்த்தகத்தில் ஈடுபட முடியாது? வர்த்தகம் செய்வோர் வங்கிகளில் கடன் பெற்றே இவற்றைச் செய்கின்றனர். வங்கிகளுக்குப் போனால் என்ன நடக்கிறது? அங்கு இருக்கின்ற உயர் அதிகாரிகள் எல்லோரும் சிங்களவர் அல்லாதோர். இலங்கை வங்கிக்குப் போனாலும் அப்படி. ஹட்டன் நஷனல் வங்கிக்குப் போனாலும் அப்படி? கொமர்ஷல் வங்கிக்குப் போனாலும் அப்படி! இப்போ அவர்கள் (சிங்களவர்கள்) கேட்கின்றார்கள் என்ன செய்வது என்று, மீண்டும் இதைச் சிங்களவர் அல்லாதோரின் ஏகபோகம் ஆக்கவா போகிறீர்கள் என அவர்கள் கேட்கிறார்கள். சிங்கள மக்கள் இனப்பிரச்சனையையே முன் வைக்கிறார்கள். இதுபெரியபிரச்சனை'' (தேசிய இனப் பிரச்சனையும் தொழிலாளர் வர்க்கமும். பக்கம் 12) இது எதனால் வந்தது? விடாமுயற்சியால் மட்டுமே.

நிலைமை இவ்வாறிருக்க இன்றைய தமிழ்ச் சமூகமோ, மிகவும் கீழ் நிலைக்கு தம்மைத் தாமே உட்படுத்திக் கொள்கிறார்கள். 'தூர உள்ள நல்ல பாடசாலைகளில் படித்த பிள்ளைகளை பிரச்சனையால் அனுப்ப முடியவில்லை'' என்று பாடசாலையிலிருந்து நிறுத்தி வைப்பது எவ்வகையில் நியாயமாகும்? நகர்ப் புறத்திலுள்ள பாடசாலைகளில் மட்டும் பிள்ளைகள் படிக்கவேண்டுமென்றால் எத்தனையோ ஆயிரம் பிள்ளைகள் கல்வியை கைவிடக் வேண்டியதுதான், அருகிலுள்ள பாடசாலைகளுக்கும் பிள்ளைகளை அனுப்பாமல் மறித்து வைப்பதால் இன்னும் அவர்கள் கீழ்மட்டத்திற்குத் தள்ளப்படுகிறார்கள் என்பதை பெற்றோர் உணரவேண்டும். பாடசாலைகளை பகிஸ்கரிக்கச் செய்யும் ஒரு சிலரினால் பெரும்பாலானோர் பாடசாலை செல்வதில்லை, இதை நிச்சயம் பகிஸ்கரிப்பவர்கள் உணரத் தலைப்பட வேண்டும். போராட்டத்தின் மூலம் இழந்த எம் உரிமைகள் ஒவ்வொன்ருக மீட்டெ

டுக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் படிப்பதற்கான எம்முரிமையை நாமே போக்கடித்து போராட்டத்தை இன்னும் பின் தள்ளிய நிலைக்கு கொண்டு செல்லலாமா? பாடசாலை உபகரணங்களை, பொருட்களை கொள்ளையடிப்பதும் இவ்வாருன ஒரு செயலே.

கிராமப்புறச் சூழலிலுள்ள மக்கள் வயது வந்த பெண்களைப் பாடசாலையிலிருந்து நிறுத்துவது இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒன்ருகும். இதனல் பெண்கள் கல்வியறிவை இழப்பதோடு மூட நம்பிக்கை என்னும் விலங்கிடப்பட்டு பெண்ணடிமை என்ற சிறையினுள்ளும் தள்ளப்படுகிருர்கள். 20ஆம்நூற்ருண்டிலும் இத்தகைய மூட நம்பிக்கை இருப்பது தமிழ்ச் சமூகத்திற்கே மாபெரும் இழப்பாகும் இத்தகைய மூட நம்பிக்கைகளினுலும் கல்வியின் நிலை பெருமளவு பின்னேக்கித் தள்ளப்படுகிறது வேலை வாய்ப்பு எதுவுமற்ற இந்நிலையிலே, விவசாயம் செய்வதற்கு நில மற்று சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டிருக்கும், இந்நிலையிலே கல்வியையும் பறிபோகச் செய்வது சிறீலங்கா அரசுக்கு துணைபோகும் ஓர் துரோகச் செயலாகும். குடும்பத்தின் தலைமகளை குடும்ப பாரத்தைச் சுமப்பதற்காக கல்வியிலிருந்து நிறுத்தி விவசாயம் செய்வித்த தாய்மார்கள் நிலம் சுவீகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் பிள்ளைகளுக்கு என்னவழி சொல்லப் போகிருர்கள்

பெரும்பாலான மாணவர்கள் இங்கு நடைபெறும் அநீதியான செயல்களைப் பொறுக்காமல் கல்வியை பாதியிலேயே கைவிட்டு போராடச் செல்கிருர்கள், ஆனல் ஆயுதம் மட்டும்தான் போராட்டமல்ல. எம் உரிமைகளை மீட்டெடுக்கும் இப் போராட்டத்திற்கு படித்துக்கொண்டே கைகொடுக்லாம், பிற்காலத்தில் முதியோர் கல்வி கொடுக்கப்படும் என்று சில கும்பல்கள் கூறிக் கொண்டிருக்கின்றன. இது வெறும் கேலிக்கூத்தாகும காலத்தேதான் பயிர் செய்ய வேண்டும் கல்வியறிவில்லாமல் எந்தவொரு பொருளாதார திட்டமோ, அன்றி வேலைத்திட்டமோ போடமுடியாது, எத்தனையோ ஆயிரம் மக்களின் இரத்தத்துக்கு மத்தியில் எத்தனையோ இளைஞர்களின் தியாகத்திற்கு மத்தியில் பெறப்படும் ஈழம் பின்னர் அர்த்தமில்லாததாகிவிடும், மாணவர் சமூகம் இன்றைய தமிழினத்துக்கும் வருங்கால சந்ததிக்கும் சுதந்திரமடையப் போகும் எம் ஈழத்திற்கும் செய்யும் மகத்தான தொண்டு உங்கள் சமூகத்தின் கல்வியை மேம்படுத்துதலாகும்

# செய்திக் கோவை

*திருகோணமலையைச் சேர்ந்த மயில்வாகனம் என்பவரின் இரு பெண்பிள்ளைகளும் அவர்களது கணவன்மார்களும் மற்றுமொரு ஜோடியும் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்கள்.*

*ஈழநாடு 3-12-85*

*மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியான துப்பாக்கி வேட்டுக்கள் ஒரு வீட்டின் சமையலறையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த 13வயதுச் சிறுமியின் தொடையைப் பதம் பார்த்து விட்டதாம்.*

*ஈழநாடு 5-12-85*

திருகோணமலை, மூதூர் ஆகிய இடங்களில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு இளம் பெண்கள் ஆறு நாட்களின் பின்னர் பிரஜைகள் குழு எடுத்த நடவடிக்கையால் விடுதலையாகினர்.

ஈழநாடு 5-12-85

திருமலையில் 12பேர் படுகொலை. இவர்களில் ஐந்துபேரின் மனைவிமாரும் கொல்லப்பட்டதுடன் மூன்று பெண்கள் மிருகத்தனமாகக் கற்பழிக்கப்பட்டுள்ளனர்.

ஈழநாடு 11-12-85

திருகோணமலை ஆலங்கேணியில் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இருவர் பலி. இரு ஆணும், பெண்ணும் கைது. திருமலை செல்வநாயகபுரத்தில் ஊர்காவல் படையின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இளம்பெண்ணும் ஆறுவயதுக் குழந்தையும் காயமுற்றனர்.

ஈழநாடு 13-12-85

திருமலையில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு தமிழ்யுவதிகள் காயமடைந்தனர். ஊர்காவல் படையும் சீருடை தரித்தவர்களுமே மேற்கண்ட துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியவர்களாம்.

ஈழமுரசு 12-12-85

மூதூரிலுள்ள தோப்பூர் என்னுமிடத்தில் ஒரே நேரத்தில் நான்கு வீடுகளுக்குள் வைத்து நான்கு பெண்கள் கற்பழிக்கப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இவர்களின் வீடுகளுக்கு வந்த சீருடையினர் அவர்களது கணவன்மாரை விசாரணைக்கு அழைத்துச் சென்று விட்டுப் பின்னர் மேற்கண்டவாறு நடந்து கொண்டார்களாம்.

ஈழமுரசு 13-12-85

யாழ்ப்பாணம் ஆமி,ஆமி என்று ஓடிச்சென்ற போது நெஞ்சின் மீது மினிவான் ஏறி இளம் பெண் மரணம்.

ஈழநாடு 14-12-85

வடமுனையில் ஒருவர் பலி சிறுமி காயம்.

ஈழநாடு 16-12-85

கணேசபுரம் கணவன் ஆயுதப்படையின் துப்பாக்கிக்குப் பலியான அதிர்ச்சியைத் தாங்கமுடியாது மனைவி மரணம். இதே போன்ற இன்னொரு சம்பவமும் கிளிநொச்சியில் நடந்துள்ளது.

ஈழநாடு 17-12-85

ஒட்டிசுட்டான்சம்பவம் ஹெலிகொப்டரில் இருந்து புறப்பட்ட துப்பாக்கி வேட்டிற்கு வயோதிப மாதுபலி.

ஈழநாடு 19-12-85

கொழும்புத்துறை 5ஹெலிகொப்டர்கள் சுற்றி வளைத்துத் தேடுதல் வேட்டை இருவர்பலி இருபெண்கள் காயம்.

ஈழநாடு 21-12-85

சுதுமலை: ஆகாயத் தாக்குதல். இரு சிறுமி உட்பட நான்குபேர் பலி. பெண்களுட்பட 10பேர் காயம்.

ஈழநாடு 22- 12- 85

வவுனியா புகையிரத நிலைய வீதியில் வசிக்கும் கிருஷ்ணபிள்ளை என்பவரும் மகள் விஜயலட்சுமியும் இராணுவத்தினரால் கைது.

ஈழநாடு 22. 12. 85

கிறிஸ்மஸ் தினத்தன்று இரவு வேளையில் துப்பாக்கி முனையில் ஊர்காவற் படையினரால் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்ட இரு இளம் பெண்களில் ஒருவர் பிணமாக மீட்கப்பட்டுள்ளார். இவ்வாறு கொலையுண்ட செல்வி தைலா யோகேஸ்வரி (20 வயது)யின் உடலில் சூட்டுக்காயம் காணப்பட்டது. இவர் கற்பழிக்கப்பட்ட பின்னரே கொலை செய்யப்பட்டுள்ளார். மற்றவர் செல்வி றெலிசியா [20]வைப்பற்றியும் அவருடன் கைதான சகோதரன் பற்றியும் தகவலேதுமில்லை.

ஈழமுரசு 28. 12. 85

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கோபாலபுரம் என்னும் இடத்தில் ஒரு கர்ப்பிணிப்பெண் உட்பட நான்கு பெண்கள் இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர்.

ஈழநாடு 4. 1. 86

யாழ் நகரில் நடந்த வான், தரை தாக்குதலின்போது முஸ்லிம் பெண்ணுன சேயின்பு (50 வயது) துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்.

ஈழநாடு 4. 1. 86

கண்காணிப்புக் குழுவினர் வருகையால் யாழ்நகரில் ஏற்பட்ட பதட்டத்தில் 17 வயதுப் பெண் பலியானுர். தெய்வானை (50வயது) காயமடைந்தார். மற்றொரு பெண்ணுன சுங்க இலாகாவைச் சேர்ந்த அதிரூபவதி என்பவரும் பலியானுர்.

ஈழநாடு 6. 1. 86

வவுனியாவில் ஊர்காவல் படையால் கொல்லப்பட்ட ஒருவரின் மனைவி திரேசம்மா (வயது 45) இராணுவத்தினுல் கைதுசெய்யப்பட்டார்.

ஈழநாடு 13. 1. 86

பலாலி இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பீரங்கிக் குண்டுத் தாக்குதலுக்கு ஞானதேவி வாமதேவன் (வயது 25) பலியானுர்.

ஈழநாடு 25. 1. 86

கிளிநொச்சி ரயில்நிலையச் சம்பவத்தில் தங்கம்மா (60 வயது) - பிச்சைக்காரி கந்தையா மனோன்மணி (12 வயது), துரைச்சாமி புவனேஸ்வரி (1? வயது). குலசேகரம் தங்கம்மா ஆகியோர் பலியானுர்கள்.

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமம் இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்ட போது இளம் பெண்களையும் கைதுசெய்தனர்.

ஈழநாடு 27. 1. 86

சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்த இரு பெண்கள் இரவுநேரம் சுடப்பட்டனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த இவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஈழமுரசு 7. 1. 86

கிளிநொச்சிப் பகுதியில் ஹெலிகொப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் திருமதி வடிவேல் பாக்கியம் (63 வயது) திருமதி பாலசரஸ்வதி [40 வயது] ஆகியோர் காயமடைந்தனர்.

ஈழநாடு 3. 2. 86

பருத்தித்துறையில் நடந்த 'ஷெல்' தாக்குதலின் போது இரு பெண்கள் மரணம். 10 பெண்கள் காயப்பட்டனர்.

ஈழநாடு 6-2-86

மூதூர் அகதிகள்முகாமில் தங்கியிருந்த 5 தமிழ் மாணவிகள் பொலிசாரால் கைது. மேலும் சில இளம் பெண்கள் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஈழநாடு 13. 2. 86

மூதூரில் கைதுசெய்யப்பட்ட பெண்களில் நால்வர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 8 பெண்கள் சுகவீனமுற்ற நிலையில் பூஸா முகாமுக்கு அனுப்பப் பட்டுள்ளதாக ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

ஈழநாடு 14. 2. 1986

மூதூரில் இரு இளம்பெண்கள் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

ஈழநாடு 16. 2. 86

செங்கலடியில் தேடுதல் நடத்திய படைவீரர்கள் ஒரு வீட்டிலிருந்த இளம் பெண்களை தாக்கிவிட்டு, ஒரு இளம் பெண்ணையும் கைது செய்துள்ளனர்.

ஈழநாடு 16. 2. 86

தென்மராட்சியில் நடந்த ஹெலிகொப்டர் தாக்குதலில் 60வயது மாது ஒருவரும் கொல்லப்பட்டார்.

ஈழநாடு 17. 2. 86

தாவடியில் நடந்த விமானத் தாக்குதலில் புஸ்பராணி [35 வயது] காலில் காயமேற்பட்டது

ஈழநாடு 20. 2. 86

சுவானிதேவி [29 வயது] அக்கரைப்பற்று உடும்பன்குளத்தில் ஆயுதப்படையினரால் கொலைசெய்யப்பட்டார்.

ஈழநாடு 23. 2. 86

சுதுமலை, தாவடிப்பகுதிகளில் மீண்டும் நடந்த விமானக் குண்டு தாக்குதலில் வயோதிப மாது ஒருவரும் பலியானார்.

ஈழநாடு 28. 2. 86

கடந்த வாரம் மன்னாரில் நிகழ்ந்த கண்ணிவெடிச் சம்பவத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட பதில் தாக்குதலின்போது படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்

திரியில் பாத்திமா பீபி [14 வயது] , கமால்பாஷ்யா [35] , பதுர்நிஷா [12] , ஆலா அந்தோனியா [34] என்போர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஈழநாடு 6. 2. 86

**செய்திகள் செய்திகளாகவே இருப்பதற்காக இவை தொகுக்கப்பட்டு பிரசுரிக்கப்படுவதில்லை. பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படுகின்றவர்களை உங்கள் நெருங்கியவர்களாக ஓர் கணம் நீங்கள் நினைத்தால் - - - - - - - - -**

## மக்கள் போராட்டம் ---> வெற்றி---> விடுதலை

---

**"குடும்பப் பொறுப்பை உதறித் தள்ளிவிட்டு நாட்டுக்காகப் போராட முன்வருவது பைத்தியக்காரத்தனமானது"**

இப்படிச் சொல்வது நாங்கள் அல்ல. இம் மண்ணின் பிள்ளைகளில் சிலர் கூறுகின்றார்கள்.

இதனைப்பற்றிய தங்கள் அபிப்பிராயங்களை எவரும் எழுதி அனுப்பலாம். அனுப்பவேண்டிய முகவரி:

**செல்வி ஜோகராமி**
3ம் வருடம்,
கலைப்பிரிவு,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

# பெண்ணடிமைத்தனமா.......? இங்கா----?

25-3-86 செவ்வாய்க்கிழமை நல்லூர் இந்துவிடுதியில் 'இன்றைய' பெண்கள்' என்றதலைப்பில் திருமதி.சர்வமங்களம் கைலாசபதி ஆழ்ந்து, ஆராய்ந்து எழுதிய தன் கட்டுரையை வாசித்தார். அக்கட்டுரை பற்றித் தம் கருத்துக்களைக் கூற வந்த ஆண்கள் சிலரின் கருத்துக்களைக் கவனிக்கும் போது அங்கு வந்திருந்தவர்களைப்பற்றி தவிர்க்க முடியாமல் இப்படி ஓர் எண்ணம் தோன்றியது "ஆணுதிக்கத்தைப் பூரணமாக உணர்ந்து கொண்டு அந்த இழிநிலையைப் போக்க வேண்டும் என்று உளப்பூர்வமாக எண்ணும் ஆண்கள் இருக்கின்ற அதேவேளை அப்படி என்று ஒன்றில்லை என்று அடித்துக் கூறி தம் ஆதிக்கத்தன்மையை இழக்க விரும்பாத அறிவாளிகளும் இருக்கிறார்கள்." பெண்ணடிமைத்தனம் இங்கு பெரிதாக இல்லை, பெண்கள் சிலர் தான் சிறுவிடயத்தை பெருங்கொடுமை என்று பெரிதுபடுத்திக் காட்டுகின்றார்கள் என்ற தொனி சிலரின் கருத்துக்களில் தென்பட்டது.

தாம் எடுத்த ஆய்வுக் கணிப்பின்படி திருப்தியோடு வாழும் பெண்களின் வீதமே அதிகம் என்று ஒருவர் கூறினார். அவர் மனதில் பெண்கள் சம்பந்தமாக பின்வரும் எண்ணம்தான் அமைந்திருக்கும் போலுள்ளது. "பெண்கள் இங்கு அடக்கி ஒடுக்கப்பட்டு வாழ்கின்றார்கள் என்று கூறுவது அப்பட்டமான பொய்.', சீதனக்கொடுமையால் தற்கொலை செய்யும் கொலை செய்யப்படும் பெண்கள் சம்பந்தமாக பத்திரிகைகளில் வரும் செய்தியைக் கொண்டு பெண்கள் அடக்கப்படுகிறார்கள் என்று சொல்லுமளவிற்குத் தான் இவர்கள் போன்றோரின் சிந்தனை அகலித்துள்ளது. தமக்குள் நடக்கும் பிரச்சனைகளை, போராட்டங்களை சொல்லவும் முடியாமல் (கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற கோட்பாட்டை மீறப்பயப்படும் பெண்கள் அல்லாவா?) சகித்து வாழவும் முடியாமல் தினமும் மனதிற்குள்ளே மாய்ந்து கொண்டிருக்கும் பெண்களின் நிலையை இவர்கள் போன்றோர் விளங்கிக் கொள்வார்கள் என்பது சந்தேகமே. அப்படிப்பட்ட பெண்கள் ஒரு வீதம்தான் என்று இவர்கள் தட்டிக்கழித்து விடுவார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்களே 75 வீதமானோர் என்பதை இவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை.

திருப்தியோடு வாழ்வதாக பெண்கள் பலர் சொன்னார்கள் என்றால் அதற்கு இரண்டு அடிப்படையான காரணங்களைக் கூறலாம் திருப்தியில்லாத வாழ்க்கை வாழ்வதாகக் கூறி விட்டு பின்னர் தாம் வீட்டில் இருக்க முடியாது என்பதை அப்பெண்கள் உணர்ந்திருந்தமை

அல்லது

தாங்கள் அதிகாரத்துக்கு அடங்கித்தான் வாழ்கின்றார்களே யன்றி அன்புக்குப் பணிந்து அல்ல என்பதை அவர்கள் புரிந்து கொள்ளாத தன்மை.

பெண்கள் கேட்டாலென்ன ஆண்கள் கேட்டாலென்ன அப்பெண்களிடமிருந்து மேற்கூறப்பட்ட 'திருப்தி'யானபதில்தான் வரும். இவற்றையெல்லாம் விளங்கிக் கொள்ளாமல் அல்லது விளங்கிக்கொண்டும் விளங்கிக் கொள்ளாதவர்கள் போல் உள்ள ஆண்களே அதிகமானோர். அன்றைய 'பெண்கள்' சம்பந்தமான கருத்தரங்குக்கு முற்போக்கு சிந்தனை கொண்ட ஆண்களே பெரும்பான்மையினராக வந்திருந்தனர். ஆனால் அவர்களில் எவரும் தம் தாயையோ, மனைவியையோ, மகளையோ, சகோதரியையோ அங்கு கூட்டி வரவில்லை. ஒரிருவர் கூட்டி வந்திருக்கக் கூடும். ஆனால் பெரும்பான்மையானோர் கூட்டி வரவில்லை. இது எதனைக் காட்டுகின்றது?

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கக்கிளை இது போன்ற பெண்கள் சம்பந்தமான கருத்தரங்குகளை இடையிடையே நடத்த முயன்றால் நிச்சயமாக பலரால் வரவேற்கப்படும். அதுமட்டுமல்லாமல் ஆணுதிக்கம் சம்பந்தப்பட்ட விடயத்தில் தெளிவில்லாத பலருக்கு தெளிவை ஊட்டும் நல்ல பணியைச் செய்ததென்ற பெயரையும் பெறும்.

# இங்கும் அங்கும்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நேற்று ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியினர் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்தினர். இப் பேரணியில் ஈழப்பெண்கள் விடுதலை முன்னணி, தமிழ் மகளிர் அவை, சுதந்திரப்பறவைகள் அமைப்பு, கிராமிய முற்போக்கு பெண்கள் அமைப்பு மக்கள் நற்பணி மன்றம், ஈழத் தாய்மார்கள் சங்கம் ஆகிய அமைப்புகள் கலந்து கொண்டன.

9. 3. 86 - ஞாயிற்றுக்கிழமை-உதயன்

"இரண்டு இனங்களுக்கிடையேயான மோதலில் ஆண்களைப் பழி வாங்குவதற்காக பெண்கள் மீது குற்றம் இழைக்கப்படுகிறது" என்று சொன்னார். டாக்டர் (செல்வி) ராதிகா குமாரசாமி. கொள்ளுப்பிட்டியில் 'சமூகமாற்றத்தில் மாதர் தனித்துவம்' என்னும் பொருள் பற்றி நடந்த கருத்தரங்கில் அவர் மேலும் தொடர்ந்து கூறும் போது

> "சர்வதேச மகளிர் ஆண்டை ஒட்டி கொழும்பில் ஓர் பேரணி நடத்தப் பட்டது. அதில் நானும் கலந்து கொண்டேன். பொலிசார் வந்து பேரணியைக் கலைத்தனர். அது மட்டும் அல்ல பொலிஸ் நிலையத்தில் இரவு தங்கும்படியும் கேட்டனர். எங்களுக்கே இந்த நிலையென்றால் சாதாரண பெண்களின் நிலையை எண்ணிப் பார்க்க முடியாமல் உள்ளது. வடக்கு கிழக்குப் பகுதிகளில் பெண்கள் மேல் இழைக்கப்படும் பயங்கர சம்பவங்கள் பற்றி எமக்கு தகவல்கள் வந்து குவிகின்றன" என்றார்.

20. 3 86 - வியாழக்கிழமை - உதயன்

---

**இங்கும் 'அடுப்பூதும் பெண்களுக்கு ஏன் இந்த வேலை' என்று கேலியாகக் கூறப் பட்டது. ஆனால் இவை எல்லாம் மறைமுகமாக தமக்குள் சிலரால் பேசிக் கொள்ளப்பட்டவை.**

**அங்கு நேராக இங்கு மறைமுகமாக, அவ்வளவுதான் வித்தியாசம்,**

# கூண்டுக்குள் அல்ல இனியும்



நாங்கள் அடைக்கப்பட்டிருப்பது
இரும்புக் கூண்டுக்குள் அல்ல.
தங்கக் கூண்டுக்குள் தான்
அது போதும் எமக்கு.

இப்படியே இனியுமா
திருப்தியடைய வேண்டும்
தங்கமோ - - - ◦ -? இரும்போ - - - - -?
விலங்கு விலங்குதான்.
கூண்டு கூண்டுதான்.

இந்த உண்மையை
விளங்கிக் கொண்டு விட்டோம்.
மூடக் கொள்கையாம் கருமேகங்கள்
கலைந்து செல்கின்றன.

கூண்டை உடைத்து
பறக்க நாங்கள் தயாராகி
விட்டோம்.

இனிமேல் தான்
ஆழமாக சுதந்திரக் காற்றை
சுவாசிக்கப் போகிறோம்.